(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 1 (11).]

# பாராளுமன்றம்

## 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

2010, ஒற்றோபர் 08, வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

## 2010, ஒற்றோபர் 19, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1 ),— 06/2006 ஆம் இலக்கமும் 2006.04.25 ஆம் திகதியும் கொண்ட பொது நிர்வாக சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர் நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்கான மாதாந்த சம்பளங்கள் பின்வருமாறு அமைய வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப் பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| பிரதம நீதியரசர் | ரூ.70,000.00 |
| | ரூ. 1,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகளும் மேன்முறையீட்டு | |
| நீதிமன்றத்தின் தலைவரும் | ரூ. 65,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 63,500.00 |

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களாக 2004, செத்தெம்பர் மாதம் 09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றப்பட்ட சம்பளத்திட்டங்களுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டு மென இந்தப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்காக, சம்பளத்தின் 25% இற்குச்சமமான மாதாந்த ஆள்சார் படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108 (1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப் பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய ஆள்சார் படிகளாக பாராளுமன்றத்தினால் 1998 மாச்சு மாதம் 17 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட படிகளுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் ஆள்சார் படிகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளு மன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.3),— மேலும், 2007.08.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசரும் உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவருக்கும் மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகளுக்கும் கீழ்க்காணுமாறு மாதாந்த வீட்டு வாடகைப் படிகள் செலுத்தப்பட வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் இப்பாராளுமன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| பிரதம நீதியரசர் | ரூ. 27,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிபதிகளின் தலைவர் | ரூ. 25,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 22,500.00 |

மேலும், உயர் நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதி களுக்குச் செலுத்தப்பட வேண்டிய வீட்டு வாடகைப் படியாக 2004, செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதி பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட படிக்குப் பதிலாக, இப் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட வீட்டு வாடகைப் படி நடைமுறைப்படுத்தப் பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.4),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு, பிரதம நீதியரசருக்கு உபசரணைப் படியாக மாதாந்தம் ரூ. 3,500 படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108 (1) ஆம் உறுப்புரையின் கீழ் இப்பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும் இதற்கு முன்னர் பிரதம நீதியரசருக்காக பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட உபசரணைப் படிக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் உபசரணைப் படி நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சர்,— இலங்கை மகாவலி அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, இலங்கை மகாவலி அதிகாரசபைச் சட்டத்தின் 3(1) ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி, மகாவலி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 1981, ஏப்பிரல் மாதம்16 ஆம் திகதிய வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.10.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*

நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சர்,— இலங்கை மகாவலி அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 1),— 1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, இலங்கை மகாவலி அதிகாரசபைச் சட்டத்தின் 3(1) ஆம் பிரிவின் கீழ் மகாவலி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2000, மே மாதம் 04 ஆம் திகதிய 1130/13 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.10.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*

நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சர்,— இலங்கை மகாவலி அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2),— 1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, இலங்கை மகாவலி அதிகாரசபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் கமத்தொழில் அபிவிருத்தி மற்றும் கமநல சேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2007, மார்ச் மாதம் 06 ஆம் திகதிய 1487/16 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.10.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*

நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சர்,— இலங்கை மகாவலி அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 3),— 1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, இலங்கை மகாவலி அதிகாரசபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் கமத்தொழில் அபிவிருத்தி மற்றும் கமநல சேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2007 மார்ச் மாதம் 09 ஆம் திகதிய 1487/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.10.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

---

## 2010, நவெம்பர் 09, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0119/ '10

ளரவ தயாசிறி ஜயசேகர,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2010, மார்ச் 31 வரை, இலங்கைக்குக் கொண்டு வரப்பட்ட சேலைனின்,

(i) தொகை எவ்வளவு என்பதையும்,

(ii) வகை யாது என்பதையும்,

(iii) இறக்குமதிச் செலவு எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கடந்த தினங்களில் சேலைன் தட்டுப்பாடு குறித்து பல்வேறு தகவல்கள் பத்திரிகைகளில் வெளிவந்ததோடு, அத்தகையதோர் நிலமை ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை என்பதையும்,

(ii) அத்தகையதோர் நிலையினைத் தோற்றுவிப்பதில் எவரேனும் உத்தியோகத்தர் தொடர்புபட்டு இருப்பாராயின், அவர்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2010, நவெம்பர் 10, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0039/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2009, ஜனவரி முதல் டிசம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் மாதாந்த பருவகாலச் சீட்டுகளின் மூலமாக இலங்கை மத்திய போக்குவரத்துச் சபைக்குக் (இ.ம.போ.ச) கிடைத்த வருமானத்தின் அளவையும்,

(ii) மேலே சொல்லப்பட்ட மாதங்களில் பயணிகள் போக்குவரத்தின் மூலம் இ.ம.போ.ச. இற்கு கிடைத்த மொத்த வருமானத்தில் மேலே சொல்லப்பட்ட வருமானம் என்ன நூற்று வீதம் என்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) ஒவ்வொரு மாதத்தின் ஆரம்பத்திலும் கிடைக்கும் வருமானத்தை ஒரு வங்கியில் வைப்பில் இடுவதன் மூலம் மேலதிக வட்டி வருமானத்தை சம்பந்தப்பட்ட திணைக்களம் ஈட்டுகின்றதா என்பதையும்,

(ii) அவ்வாறெனில், மேலே சொல்லப்பட்ட மாதங்களில் அவ்வாறு ஈட்டிய தொகையையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0076/ '10

கௌரவ சஜித் பிரேமதாச,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) இற்றைக்கு ஒரு வருடத்திற்கு முன்னர் கொங்ரீட் இட்டு செப்பனிடப்பட்ட அம்பாந்தோட்டை மாவட்டத்தின் பெலிஅத்த பிரதேச செயலாளர் பிரிவின் தாரபேரிய கிழக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்ட தாரபேரிய, பொத்தேவெல வாவி வீதியின் 200 மீற்றர் வரையிலான தூரம் தற்போது கொங்கிரீட் உடைந்து குன்றும் குழியுமாக முழுமையாக சேதமடைந்த நிலையிலிருப்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீதியை அபிவிருத்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதி எவ்வளவு என்பதையும்,

(ii) நிர்மாணப்ப பணிகளுக்காக நிதி விடுவிக்கும் போது உரிய நியமங்களுக்கமைய பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளமைக்கான விதப்புரைகள் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) மேற்படி வீதியை நிர்மாணிப்பதற்கான பணக் கொடுப்பனவுகளின் போது வேறு எந்த நிறுவனங்களிடமிருந்து விதப்புரைகள் பெறப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்படி வீதி நிர்மாணிப்பு தொடர்பாக முறையான விசாரணையொன்றை நடத்துவதற்கும் அவ்வீதியை சீரான நிலைக்கு கொண்டுவருவதற்கும் அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0528/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கிழக்கு மாகாணத்தின், உள்ளக சுற்றுவட்ட வீதியானது அபிவிருத்தி செய்வதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ளதொரு வீதியா என்பதையும்,

(ii) ஆமெனில், இவ்வீதி தற்போது அபிவிருத்தி செய்யப்படடு வருகின்றதா என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(ஆ) இவ்வீதியில் அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்றுவருமாயின்,

(i) அதன் நீளம் எத்தனை கிலோ மீட்டர்கள் என்பதையும்,

(ii) இதன் பணிகளை முடிவுறுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள திகதி யாதென்பதையும்,

(iii) இதற்காக மதிப்பிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவ்வீதியின் நிர்மாணப் பணிகளுக்காக கேள்ளிப் பத்திரம் கோரப்பட்டதா என்பதையும்,

(ii) ஆமெனில், கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்த நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்,

(iii) அந்தந்த நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப் பத்திர விலைகள் யாவையென்பதையும்,

(iv) கேள்விப் பத்திரம் ஒப்படைக்கப்பட்ட நிறுவனம் மற்றும் குறித்த கேள்விப் பத்திரத் தொகை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) இவ்வீதியை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தத் தொகை உள்நாட்டு நிதியங்களிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(ii) இன்றேல், வெளிநாட்டு உதவிகளிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(iii) வெளிநாட்டு உதவி பெறப்பட்டிருப்பின், உதவி வழங்கிய நாட்டின் பெயர் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0607/'10

கௌரவ ரீ.ரஞ்சித் த சொய்சா,— கமத் தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் எத்தனை ஹெக்டெயர் வயல் காணிகள் தரிசு நிலங்களாக மாறியுள்ளன என்பதையும்,

(ii) இந்த வயல் நிலங்களை மீண்டும் சாகுபடி செய்வதற்காக விவசாயிகளுக்கு ஊக்குவிப்புகள் வழங்கப்படுகின்றனவா என்பதையும்,

(iii) ஆமெனில், அது யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இந்த வயல் நிலங்களை சாகுபடி செய்வதன் மூலம் எத்தனை மெற்றிக் தொன் அறுவடையைப் பெறுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0613/ '10

கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை விஸ்தரிக்கும் கருத்திட்டத் திற்காக மதிப்பிடப்பட்ட செலவினம் எவ்வளவு என்பதையும்,

(ii) அந்தக் கருத்திட்டம் கடன் வசதியினூடாகவா அல்லது கொடைகளின் கீழா முன்னெடுக்கப்படுகின்றது என்பதையும்,

(iii) அந்தக் கருத்திட்டத்தை நிறைவு செய்ய எதிர்பார்க்கும் வருடம் யாதென்பதையும்,

(iv) குறித்த கருத்திட்ட நிறைவின் போது நாளாந்த எண்ணெய் சுத்திகரிப்பு கொள்ளளவினை எத்தனை மசகு எண்ணெய் பீப்பாக்களால் அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் புதிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், அந்தக் கருத்திட்டத்தை ஆரம்பிக்க எதிர்பார்க்கும் வருடம் யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0621/ '10

கௌரவ சுனில் ஹந்துனெத்தி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) கல்வி அமைச்சின் செயலாளரது 200841 ஆம் இலக்க சுற்றறிக்கையின் மூலம் பாடசாலை பழைய மாணவர் சங்கம் மற்றும் பல்வேறு சங்கங்களினால் பாடசாலை மாணவர்களிடமும் பெற்றோர்களிடமும் சில காரணங்களைக் காட்டி நிதி வசூலிப்பது தடை செய்யப்பட்டுள்ளது என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) அவ்வாறிருக்கையில், கொழும்பு றோயல் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் 2010 Royal Parade எனும் பெயரில் ரூபா. 600.00 பெறுமதியான கட்டமிடப்பட்ட அட்டைகளை பிள்ளைகளுக்கும் பகிர்ந்தளித்து அதனூடாக நிதி வசூலிக்கின்றது என்பதை அவர் அறிவாரா?

(இ) குறிப்பிட்ட சுற்றறிக்கைக்கு முரணாக நிதி வசூலிக்கப்பட்டிருப்பின் இது தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0040/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கடந்த பத்து வருடங்களாக இலங்கை அரசாங்கத்திற்கு கடன் வழங்கிய நாடுகளின், சர்வதேச நிதி நிறுவனங்களின் அல்லது வங்கிகள் மற்றும் தனியார் துறையினர்களின் பெயர்களை வருடாந்த அடிப்படையிலும்,

(ii) இன்றுள்ளவாறாக இக்கடன்களின் மொத்த நிலுவைத் தொகையினையும்,

(iii) 1999 ஆம் ஆண்டின் இறுதியில் இருந்த கடன்களின் மொத்த நிலுவைத் தொகையினையும்,

(iv) 1999 இலிருந்து இற்றை வரையில் நாடுகளினால் அல்லது நிறுவனங்களினால் கடனாக வழங்கப்பட்ட தொகையினை வருடாந்த அடிப்படையிலும்,

(v) வட்டி வீதத்தினையும் திருப்பிச் செலுத்தும் கால அளவினையும்

அவர் இச் சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) (i) 2000 ஆம் ஆண்டிலிருந்து 2015 வரையான காலப்பகுதியில் திருப்பிச்செலுத்த வேண்டிய மொத்தக் கடன் தொகையை (வட்டியும் முதலுமாக), இற்றைவரையில் எடுக்கப்பட்ட கடன்களுடனும் வருடாந்த அடிப்படையிலும்,

(ii) மேற்குறிப்பிட்ட தகவலினை யு.எஸ் டொலர்களிலும் விசேட மீள்பெறல் உரிமை அளவிலும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0077/ '10

கௌரவ சஜித் பிரேமதாச,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) இற்றைக்கு ஒரு வருடத்திற்கு முன்னர் கொங்ரீட் இட்டு செப்பனிடப்பட்ட அம்பாந்தோட்டை மாவட்டத்தின் பெலிஅத்த பிரதேச செயலாளர் பிரிவின் தாரபேரிய மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்ட கல்கெம விகாரை வீதியின் 200 மீற்றர் வரையிலான தூரம் தற்போது கொங்கிரீட் உடைந்து குன்றும் குழியுமாக முழுமையாக சேதமடைந்த நிலையிலிருப்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீதியை அபிவிருத்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதி எவ்வளவு என்பதையும்,

(ii) நிர்மாணப்ப பணிகளுக்காக நிதி விடுவிக்கும் போது உரிய நியமங்களுக்கமைய பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளமைக்கான விதப்புரைகள் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) மேற்படி வீதியை நிர்மாணிப்பதற்கான பணக் கொடுப்பனவுகளின் போது வேறு எந்த நிறுவனங்களிடமிருந்து விதப்புரைகள் பெறப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்படி வீதி நிர்மாணிப்பு தொடர்பாக முறையான விசாரணையொன்றை நடத்துவதற்கும் அவ்வீதியை சீரான நிலைக்கு கொண்டுவருவதற்கும் அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், என்?

0529/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கிழக்கு மாகாணத்தின், திருக்கொண்டியாடுமடு - ஜயந்திபுர வீதியானது அபிவிருத்தி செய்வதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ளதொரு வீதியா என்பதையும்,

(ii) ஆமெனில், இவ்வீதி தற்போது அபிவிருத்தி செய்யப்படடு வருகின்றதா என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(ஆ) இவ்வீதியில் அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்றுவருமாயின்,

(i) அதன் நீளம் எத்தனை கிலோ மீட்டர்கள் என்பதையும்,

(ii) இதன் பணிகளை முடிவுறுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள திகதி யாதென்பதையும்,

(iii) இதற்காக மதிப்பிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவ்வீதியின் நிர்மாணப் பணிகளுக்காக கேள்ளிப் பத்திரம் கோரப்பட்டதா என்பதையும்,

(ii) ஆமெனில், கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பித்த நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்,

(iii) அந்தந்த நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப்பத்திர விலைகள் யாவையென்பதையும்,

(iv) கேள்விப் பத்திரம் ஒப்படைக்கப்பட்ட நிறுவனம் மற்றும் குறித்த கேள்விப் பத்திரத் தொகை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) இவ்வீதியை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தத் தொகை உள்நாட்டு நிதியங்களிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(ii) இன்றேல், வெளிநாட்டு உதவிகளிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(iii) வெளிநாட்டு உதவி பெறப்பட்டிருப்பின், உதவி வழங்கிய நாட்டின் பெயர் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0608/ '10

கௌரவ ரீ.ரஞ்சித் த சொய்சா,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2007, 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் இந்நாட்டின் சராசரி வருடாந்த தெங்கு உற்பத்தி எவ்வளவு என்பதையும்,

(ii) மேற்கூறிய வருடங்களில் தெங்கு ஏற்றுமதி மூலம் சம்பாதித்த மொத்த வருமானம் எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) தென்மாகாணத்தில் தெங்குச் செய்கையில் தீவிரமாகப் பரவி வரும் தென்னை ஓலைகள் காவும் நோயை தடுக்க இதுவரை எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்னவென்பதையும்,

(ii) இந்நோய் ஏனைய பிரதேசங்களில் பரவுவதைத் தடுக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்னவென்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0622/ '10

கௌரவ சுனில் ஹந்துனெத்தி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) கொழும்பு றோயல் கல்லூரியில் கல்வி பயிலும் மொத்த மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) 2008 ஆம் ஆண்டுக்காக அப்பாடசாலையில் ஒரு மாணவனிடமிருந்து ரூபா. 3,300.00 வீதம் பாடசாலைக் கட்டணம் அறவிடப்பட்டுள்ளதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) 2009 ஆம் ஆண்டுக்காக பாடசாலைக் கட்டணமாக மேற்படி பாடசாலையில் ஒரு மாணவரிடமிருந்து அறவிடப்பட்டுள்ள பணத் தொகை யாதென்பதையும்,

(ii) 2009 ஆம் ஆண்டுக்காக கொழும்பு றோயல் கல்லூரிக்காக அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், என்?

0041/ ‘10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) அரசாங்க பொறுப்பு முயற்சிகள் மீதான குழுவின் முன்னாள் தவிசாளர்களான, கௌரவ ஜோண் அமரதுங்க, கௌரவ ஜெயராஜ் பெர்னாந்துபுள்ளே, கௌரவ ரோகித்த போகொல்லாகம ஆகியோரினால் சமர்ப்பிக்கப்பட்ட அ.பொ.கு அறிக்கைகள் மீதும், கௌரவ விஜயதாச ராஜபக்ஷ அவர்களால் 2007.01.12 அன்று சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பாகவும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) முன்னாள் கணக்காய்வாளர் நாயகம் திரு. மாயாதுன்ன அவர்களால் 2006, ஜூலை 20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பாகவும், அரசாங்கக் கணக்குகள் குழுவின் தவிசாளர் கௌரவ ரஊப் ஹக்கீம் அவர்களால் 2007.11.29ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட PS12 ஆம் இலக்க அறிக்கை தொடர்பாகவும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளையும்,

(ii) அவ்வறிக்கைகளின் பிரகாரம் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட நிறுவனங்களின் பெயர்களையும்,

(iii) குழு அறிக்கையின் பணிப்புரைகளுக்கமைய முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0080/ ’10

கௌரவ சஜித் பிரேமதாச,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) இற்றைக்கு ஒரு வருடத்திற்கு முன்னர் கொங்ரீட் இட்டு செப்பனிடப்பட்ட அம்பாந்தோட்டை மாவட்டத்தின் பெலிஅத்த பிரதேச செயலாளர் பிரிவின் கஜநாயக்ககம கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்ட மொரயாய சந்தியிலிருந்து போகமுவ வரயிலான வீதியின் 200 மீற்றர் வரையிலான தூரம் தற்போது கொங்கிரீட் உடைந்து குன்றும் குழியுமாக முழுமையாக சேதமடைந்த நிலையில் இருப்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீதியை அபிவிருத்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதி எவ்வளவு என்பதையும்,

(ii) நிர்மாணப்ப பணிகளுக்காக நிதி விடுவிக்கும் போது உரிய நியமங்களுக்கமைய பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளமைக்கான விதப்புரைகள் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) மேற்படி வீதியை நிர்மாணிப்பதற்கான பணக் கொடுப்பனவுகளின் போது வேறு எந்த நிறுவனங்களிடமிருந்து விதப்புரைகள் பெறப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்படி வீதி நிர்மாணிப்பு தொடர்பாக முறையான விசாரணையொன்றை நடத்துவதற்கும் அவ்வீதியை சீரான நிலைக்கு கொண்டுவருவதற்கும் அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0530/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கிழக்கு மாகாணத்தின், மஹாஓயா - செங்கலடி வீதியானது அபிவிருத்தி செய்வதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ளதொரு வீதியா என்பதையும்,

(ii) ஆமெனில், இவ்வீதி தற்போது அபிவிருத்தி செய்யப்படடு வருகின்றதா என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(ஆ) இவ்வீதியில் அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்றுவருமாயின்,

(i) அதன் நீளம் எத்தனை கிலோ மீட்டர்கள் என்பதையும்,

(ii) இதன் பணிகளை முடிவுறுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள திகதி யாதென்பதையும்,

(iii) இதற்காக மதிப்பிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவ்வீதியின் நிர்மாணப் பணிகளுக்காக கேள்ளிப் பத்திரம் கோரப்பட்டதா என்பதையும்,

(ii) ஆமெனில், கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பித்த நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்,

(iii) அந்தந்த நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப்பத்திர விலைகள் யாவையென்பதையும்,

(iv) கேள்விப் பத்திரம் ஒப்படைக்கப்பட்ட நிறுவனம் மற்றும் குறித்த கேள்விப் பத்திரத் தொகை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) இவ்வீதியை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தத் தொகை உள்நாட்டு நிதியங்களிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(ii) இன்றேல் , வெளிநாட்டு உதவிகளிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(iii) வெளிநாட்டு உதவி பெறப்பட்டிருப்பின், உதவி வழங்கிய நாட்டின் பெயர் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0623/ '10

கௌரவ சுனில் ஹந்துனெத்தி,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) வாகனங்கள் வெளியேற்றும் புகையை பரிசோதிப்பதற்காக நாடெங்கிலும் தாபிக்கப்பட்டுள்ள சேவை நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) வாகனப் புகையைப் பரிசோதிப்பதன் மூலம் அரசாங்கம் இதுவரை பெற்றுள்ள வருமானம் எவ்வளவென்பதையும்,

(iii) சுற்றாடல் பாதுகாப்பு வரியாகக் கருதப்படும் இவ்வரித் தொகையின் மூலம் சுற்றாடல் பாதுகாப்புக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்,

(iv) வாகனப் புகையை பரிசோதித்து தரச்சான்றிதழை வழங்குவதற்கு மேற்படி பரிசோதனையை நடத்தும் நிறுவனங்கள் பூர்த்தி செய்துள்ள தகைமைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2010, நவெம்பர் 11, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0042/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) அரசுக்குச் சொந்தமான பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கையையும்,

(ii) மாகாணம், மாவட்டம், தேர்தல் தொகுதி ஆகியவற்றைக் குறிப்பிடப்பட்டு அப்பல்கலைக்கழகங்களின் அமைவிடங்களையும்,

(iii) இலங்கையில் தனியார் பல்கலைக்கழகங்கள் செயற்படுகின்றனவா என்பதையும்,

(iv) அவ்வாறாயின், அவற்றின் பெயர்கள் மற்றும் அவை ஒவ்வொனறிலும் பதிவுசெய்யப்பட்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கையையும்,

(v) அவை உள்ளூர் பட்டங்களையா அல்லது வெளிநாட்டுப் பட்டங்களையா வழங்குகின்றன என்பதையும்

அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) ஒவ்வொரு பல்கலைக்கழகத்தினதும் கடந்த 6 வருடங்களுக்கான கல்வி நாட்கள் எத்தனை என்பதையும்,

(ii) கடந்த 6 வருடங்களில், வகுப்பு பகிஸ்கரிப்பு எதுவும் இன்றி தொழிற்பட்டிருந்தால், அவ்வாறு நடைபெற்ற நாட்களுடனான வருடவாரியான மேலே (i) இல் குறிப்பிட்டவாறு ஒரு ஒப்பீட்டையும்,

(iii) ஒவ்வொரு பல்கலைக்கழகத்தினதும் கடந்த 5 வருடங்களுக்கான பொதுவான மாணவர் வரவை வருட அடிப்படையில் எவ்வளவு என்பதையும்

பீடங்கள் அடிப்படையில் அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0053/'10

கௌரவ ராஜீவ விஜேசிங்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் பாராளுமன்ற சட்டம் மூலம் கூட்டிணைக்கப்பட்டு சமூக சேவைகளில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு கிடைக்கின்ற வெளிநாட்டு நிதிகளை கண்காணிப்பதற்கு தற்போதுள்ள பொறிமுறைகள் என்ன என்பதையும்,

(ii) கம்பனிகள் பதிவாளரிடம் பதிவு செய்து சமூக சேவைகள் அல்லது ஆய்வுப் பணிகள் அல்லது பரிந்துரைகளில் ஈடுபட்டுள்ள கம்பனிகளுக்கு கிடைக்கின்ற வெளிநாட்டு நிதிகளை கண்காணிப்பதற்கு தற்போதுள்ள பொறிமுறைகள் என்ன என்பதையும்,

(iii) அவ்விதமான கம்பனிகள் தேவைப்படுத்தப்பட்டவாறு தமது அறிக்கைகளை சமர்ப்பிக்கின்றனவா, வரி தொடர்பான கோவைகளைப் பேணுகின்றனவா, அவற்றிற்கு கிடைக்கின்ற வருமானம் தொடர்பில் செலுத்த வேண்டியுள்ள வரிகளை செலுத்துகின்றனவா என்பதையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) (i) 1999 முதல் 2010 வரையிலான காலப்பகுதியில் இனக் கற்கைகளுக்கான சர்வதேச நிலையத்திற்கு வெளிநாட்டு மூலங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற நிதி எவ்வளவு என்பதையும், இந்நிதிகள் என்ன நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டன என்பதையும்,

(ii) அந்நிதிகளைப் பெற்றுக் கொண்ட நோக்கத்திற்கு வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் ஒப்புதல் அளித்ததா என்பதையும்,

(iii) இந்நிதி பயன்படுத்தப்படும் முறை தொடர்பாக ஏதாவது அரசாங்க முகவரினால் கண்காணிக்கப்பட்டதா என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) (i) கடுமையான பகிடிவதைகளை கொடுத்ததாக அறிவிக்கப்பட்டுள்ள பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) கடந்த இரண்டு வருடங்களில் இது தொடர்பாக நீதிமன்றத்தில் விசாரணை செய்து முடிவடைந்த மற்றும் எதிர்காலத்தில் விசாரிக்கப்படவுள்ள வழக்குகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0081/ ’10

கௌரவ சஜித் பிரேமதாச,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) இற்றைக்கு ஒரு வருடத்திற்கு முன்னர் கொங்ரீட் இட்டு செப்பனிடப்பட்ட அம்பாந்தோட்டை மாவட்டத்தின் பெலிஅத்த பிரதேச செயலாளர் பிரிவின் வக்கமுல்ல கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்ட தொரன சந்தியிலிருந்து வடிகாலமைப்புச் சபை வரையிலான வீதியின் 200 மீற்றர் வரையிலான தூரம் தற்போது கொங்கிரீட் உடைந்து குன்றும் குழியுமாக முழுமையாக சேதமடைந்த நிலையிலிருப்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீதியை அபிவிருத்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதி எவ்வளவு என்பதையும்,

(ii) நிர்மாணப்ப பணிகளுக்காக நிதி விடுவிக்கும் போது உரிய நியமங்களுக்கமைய பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளமைக்கான விதப்புரைகள் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) மேற்படி வீதியை நிர்மாணிப்பதற்கான பணக் கொடுப்பனவுகளின் போது வேறு எந்த நிறுவனங்களிடமிருந்து விதப்புரைகள் பெறப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்படி வீதி நிர்மாணிப்பு தொடர்பாக முறையான விசாரணையொன்றை நடத்துவதற்கும் அவ்வீதியை சீரான நிலைக்கு கொண்டுவருவதற்கும் அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0130/ ‘10

கௌரவ றொசான் றணசிங்ஹ,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2005 ஆம் ஆண்டளவில் நாட்டில் செயற்படுத்தப்பட்ட கிராமிய மின் திட்டங்களின் பெயர்கள், அந்தந்த மாவட்டங்களின் அடிப்படையில் யாவையென்பதையும்,

(ii) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை ஆரம்பிக்கப்பட்டுள்ள கிராமிய மின் கருத்திட்டங்களின் பெயர்கள், ஒவ்வொரு மாவட்டத்தின் அடிப்படையில் யாவையென்பதையும்,

(iii) அந்த ஒவ்வொரு கருத்திட்டத்திற்காகவும் செலவு செய்யப்பட்ட தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

(iv) எதிர்காலத்தில் ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ள கிராமிய மின் திட்டங்கள் யாவை என்பதையும்,

(v) அதன் பொருட்டு செலவு செய்ய எதிர்பார்த்துள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0294/ ' 10

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— போக்கு வரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 1991.08.25 ஆந் திகதி இ.போ.ச. மக்கள் மயப்படுத்தப்பட்டதன் பின்னர் 2002 ஆம் ஆண்டு வரை ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கு முதல் நியமனத் திகதி தொடக்கம் பணிக்கொடை செலுத்துவதற்கு இ.போ.ச. கடமைப்பட்டுள்ளது என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) முதல் நியமனத் திகதி தொடக்கம் அவர்களுக்குப் பணிக் கொடை செலுத்த முடியாமலிருப்பதாகக் கூறி இ.போ.ச. நீதிமன்ற தீர்ப்பொன்றை கோரியிருந்ததா என்பதையும்,

(ii) அந்த நீதிமன்றத் தீர்ப்பு என்னவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) தொழில் ஆணையாளரினால் அந்த ஓய்வு பெற்றோருக்கு பணிக்கொடை செலுத்துமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) அவ்வாறெனின், ஓய்வு பெற்ற ஊழியர்கள் எத்தனை பேருக்கு என்பதையும்,

(iii) செலுத்தவிருக்கும் மொத்த தொகை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) அந்த ஓய்வு பெற்றோருக்கு பணிக்கொடை செலுத்த நடவடிக்கை எடுக்கப்படாமல் இருப்பதற்கான காரணம் என்ன என்பதையும்,

(ii) அந்தப் பணத்தைத் துரிதமாகச் செலுத்த எடுக்கப்படும் நடவடிக்கைகள் என்ன என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0342/ '10

கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 'ஜி.எஸ்.பி.ப்ளஸ்' சலுகையின் கீழ் எமது நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் உற்பத்தி வகைகள் யாவையென்பதையும்,

(ii) மேற்படி உற்பத்திகள் ஏற்பறுமதி செய்யப்படும் நாடுகள் யாவையென்பதையும்,

(iii) உற்பத்திகளை அனுப்பும் போது வழங்கப்பட்ட வரிச்சலுகை எவ்வளவு என்பதையும்,

(iv) இச்சலுகை நீக்கப்பட்டால் இழக்கப்படு தொழில்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(v) இக்காரணத்தால் இழக்கப்படும் தொழில்முயற்சிகளின் எண்ணிக்கை எவ்வெளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அரசு அந்நிய செலாவணிக்காக எடுக்கும் நடவடிக்கைகள் என்னவென்பதையும்,

(ii) ஜி.எஸ்.பி.ப்ளஸ் சலுகையை தாரத ஐரோப்பிய நாடுகளுக்கு உற்பத்திகளை அனுப்பும் போது ஏற்படும் நட்டம் எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0531/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கிழக்கு மாகாணத்தின், அக்கரைப்பற்று - மட்டக்களப்பு - திருக்கொண்டுயாடுமடு வீதியானது அபிவிருத்தி செய்வதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ளதொரு வீதியா என்பதையும்,

(ii) ஆமெனில், இவ்வீதி தற்போது அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றதா என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(ஆ) இவ்வீதியில் அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்றுவருமாயின்,

(i) அதன் நீளம் எத்தனை கிலோ மீட்டர்கள் என்பதையும்,

(ii) இதன் பணிகளை முடிவுறுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள திகதி யாதென்பதையும்,

(iii) இதற்காக மதிப்பிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவ்வீதியின் நிர்மாணப் பணிகளுக்காக கேள்ளிப் பத்திரம் கோரப்பட்டதா என்பதையும்,

(ii) ஆமெனில், கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பித்த நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்,

(iii) அந்தந்த நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப்பத்திர விலைகள் யாவையென்பதையும்,

(iv) கேள்விப் பத்திரம் ஒப்படைக்கப்பட்ட நிறுவனம் மற்றும் குறித்த கேள்விப் பத்திரத் தொகை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) இவ்வீதியை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தத் தொகை உள்நாட்டு நிதியங்களிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(ii) இன்றேல் , வெளிநாட்டு உதவிகளிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(iii) வெளிநாட்டு உதவி பெறப்பட்டிருப்பின், உதவி வழங்கிய நாட்டின் பெயர் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0566/ '10

கௌரவ புத்திக பத்திரண,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) கூட்டுறவுச் சட்டத்தின் கீழ் மத்திய வங்கியினால் பதிவு செய்யப்பட்ட வரையறுக்கப்பட்ட இலங்கை மனிதவள அபிவிருத்தி வங்கிச் சங்கத்தின் அனைத்துக் கிளைகளும் தற்போது ஒழிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இவ்வங்கிக்கு உரியதாயிருந்த கிளைகள் எத்தனை என்பதையும்,

(ii) வைப்பாளர்களின் எண்ணிக்கை மற்றும் வைப்பிலிடப்பட்டிருந்த பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) வைப்புத் தொகைகளை மீளளிப்பதற்காக 2007 ஆம் ஆண்டில் இடைக்காலக் குழுவொன்று நியமிக்கப்பட்டதா என்பதையும்,

(ii) அவ்வாறாயின், இந்த இடைக்காலக் குழுவின் பெறுபேறுகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) குறிப்பிட்ட வங்கியில் வைப்பாளர்களுக்கு திருப்பிச் செலுத்த வேண்டிய முழுத் தொகை யாதென்பதையும்,

(ii) இத்தொகையை மீண்டும் செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) இன்றேல், இத்தொகைகளை செலுத்தி முடிக்கும் இறுதித் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0573/ '10

கௌரவ றஊப் ஹக்கீம்,— சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2004 ஆம் ஆண்டு திசெம்பர் 26ஆம் திகதி இடம்பெற்ற சுனாமி பேரழிவினால் தமது பெற்றோர் மரணமடைந்ததன் காரணமாக அல்லது காணாமற்போனதன் காரணமாக அநாதைகளான பிள்ளைகளில், அரசாங்க மற்றும் தனியார் சிறுவர் இல்லங்களுக்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட பிள்ளைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்,

(ii) அப்போது, அப்பிள்ளைகளின் வயது மற்றும் அவர்களது பெயர் அல்லது பின்னர் அவர்களை அடையாளம் காணும் பொருட்டு சிறுவர் இல்லத்தினால் சூட்டப்பட்ட பெயர்கள் யாவை என்பதையும்,

(iii) மேற்படி ஒவ்வொரு பிள்ளையையும் அரச நன்னடத்தை இல்லத்தில் ஒப்படைப்பதற்கு ஒத்துழைப்பு நல்கிய பொலிஸ் நிலையங்கள், வைத்தியசாலைகள் அல்லது நபர்கள் யாவர் என்பதையும்,

(iv) தற்போது அப்பிள்ளைகள் தங்கவைக்கப்பட்டுள்ள அரசாங்க அல்லது தனியார் சிறுவர் இல்லங்களின் பெயர்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி பிள்ளைகளில், தற்போது பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்கள் இனங்காணப்பட்டு, அவர்களது பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டிருக்கும் பிள்ளைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) இவர்களது பெயர், வயது, அவ்வாறு ஒப்படைக்கப்பட்ட திகதி, முன்வந்த பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்களின் பெயர், முகவரி மற்றும் மேற்படி ஒப்படைப்பை மேற்கொண்ட நீதிமன்றம் யாதென்பதையும்

மாவட்ட ரீதியில் அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0047/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக கேட்பதற்கு,—

(அ) உலக சந்தையில் ஒரு பீப்பாய் எண்ணெயின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) 2010 ஜனவரி முதல் இற்றை வரையிலான காலப்பகுதியில் ஒரு பீப்பாய் எண்ணெயின் விலைத்தளம்பலைடந்த விதத்தையும்,

(ii) இந் நாட்டிற்கு வரும் வெளிநாட்டுக் கப்பல்களுக்கு விற்கப்படும் ஒரு லீற்றர் டீசலின் விற்பனை விலையையும், அதே டீசல் உள்நாட்டு நுகர்வோருக்கு விற்கப்படும் விலையையும்,

(iii) விமானங்களுக்கு விற்கப்படும் எரிபொருளின் விலையையும்,

(iv) உள்நாட்டு மீன்பிடிப் படகுகளுக்கு விற்கப்படும் ஒரு லீற்றர் டீசலின் விற்பனை விலையையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) வெளிநாட்டுக் கப்பல்களுக்கு வழங்கப்படுகின்ற எரிபொருள் சலுகை, உள்நாட்டு மீன்பிடிக்கலன்களுக்கு ஏன் வழங்கப்படுவதில்லை என்பதற்கான காரணத்தை அவர் கூறுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0335/ '10

கௌரவ சஜித் பிரேமதாஸ,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தல் சூரியவெவ பிரதேச செயலாளர் பிரிவில் சூரியவெவ நபடகஸ்வெவ, 'பிறியஷானி' முகவரியில் வசிக்கும் திருமதி எஸ். ஜீ. குசுமலதாவுக்கு வழங்கிய நபடகஸ்வெவ, மகஆர யூடி 06, 07 ஆம் இலக்க நீர்ப்பாசனக் காணி அதுவரையில் நிர்ணயம் செய்து கொடுக்கப்படவில்லை என்பதையும்,

(ii) இவருடைய கணவர் காட்டு யானை தாக்கியதால் மரணமடைந்துள்ளார் என்பதோடு இவர் பல கஷ்டங்களுக்கும் மத்தியில் தனது 4 பிள்ளைகளையும் போஷிக்கிறார் என்பதையும்,

(iii) திருமதி குசுமாவதியில் 7 ஆம் இலக்கக் காணியினை வேறொரு நபர் அத்துமீறிக் கைப்பற்றி உள்ளார் என்பதோடு அதற்கு மேலதிகமாக, மேற்படி நபர் யூடி 08 எனும் இன்னொரு காணியையும் கைப்பற்றி உள்ளார் என்பதையும்,

(iv) இக்காணியினை நிர்ணயம் செய்து கொள்ளும் பொருட்டு திருமதி குசுமலதா மயுரபுர காணிக் காரியாலயத்துக்குச் சென்று தனது கோரிக்கைகளை முன்வைத்து உள்ளார் என்பதையும்,

(v) அது தொடர்பில் உத்தியோகத்தர்கள் இதுவரையில் கவனம் செலுத்தவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) திருமதி குசுமாவதிக்கு கிடைத்துள்ள 07 ஆம் இலக்கக் காணியின் நிர்ணய உரிமையினை, இவருக்குப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(ii) இன்றேல், இதன்பொருட்டு வேறொரு காணி இவருக்கு வழங்கப்படுமா என்பதையும்,

(iii) அவ்வாறாயின், அது எவ்வளவு காலத்தினுள் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0532/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கிழக்கு மாகாணத்தின், அம்பிலாந்துறை - வீரமுனை வீதியானது அபிவிருத்தி செய்வதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ளதொரு வீதியா என்பதையும்,

(ii) ஆமெனில், இவ்வீதி தற்போது அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றதா என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(ஆ) இவ்வீதியில் அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்றுவருமாயின்,

(i) அதன் நீளம் எத்தனை கிலோ மீட்டர்கள் என்பதையும்,

(ii) இதன் பணிகளை முடிவுறுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள திகதி யாதென்பதையும்,

(iii) இதற்காக மதிப்பிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவ்வீதியின் நிர்மாணப் பணிகளுக்காக கேள்ளிப் பத்திரம் கோரப்பட்டதா என்பதையும்,

(ii) ஆமெனில், கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பித்த நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்,

(iii) அந்தந்த நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப்பத்திர விலைகள் யாவையென்பதையும்,

(iv) கேள்விப் பத்திரம் ஒப்படைக்கப்பட்ட நிறுவனம் மற்றும் குறித்த கேள்விப் பத்திரத் தொகை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) இவ்வீதியை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தத் தொகை உள்நாட்டு நிதியங்களிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(ii) இன்றேல், வெளிநாட்டு உதவிகளிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(iii) வெளிநாட்டு உதவி பெறப்பட்டிருப்பின், உதவி வழங்கிய நாட்டின் பெயர் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0048/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) மேல்கொத்மலை நீர் மின்சக்தி கருத்திட்டம் நிர்மாணப் பணிகள் நிறைவடையும் திகதியையும்,

(ii) இக்கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டபோது மதிப்பிடப்பட்ட செலவுத் தொகை மற்றும் இன்றுள்ளவாறான செலவுத்தொகை ஆகியவற்றை வெவ்வேறாகவும்,

(iii) இக்கருத்திட்டத்திற்கான நிதி எந்த நாட்டிலிருந்து அல்லது எந்த நிறுவனத்திடமிருந்து கிடைக்கப்பெறும் என்பதையும்,

(iv) கடன் வழங்கும் நிபந்தனைகளையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) பெறுமானத்தேய்வு உள்ளடங்களாக மின் அலகு ஒன்றிற்கான செலவை அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0336/ '10

கௌரவ சஜித் பிரேமதாஸ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் அம்பாந்தோட்டை வலய கல்வி அலுவலகத்திற்குட்பட்ட லுணுகம்வெஹெர கோட்டக் கல்வி அலுவலகத்தினால் நிர்வகிக்கப்படும் எம். ஆர். தாசிம் முஸ்லிம் வித்தியாலயத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) இந்தப் பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் பாடங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஆங்கில பாடத்திற்கு 2006 ஆம் ஆண்டிலிருந்து ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றதென்பதையும்,

(ii) இப்பாடத்தை தொண்டர் அடிப்படையில் கற்பிப்பதற்கு மே வீதி, முகவரியில் வதியும் துவான் சல்பிகா அலி அவர்கள் செயலாற்றினார் என்பதையும்

அவர் அறிவாரா?

(இ) (i) இவரது சேவையை மீண்டும் இப்பாடசாலைக்குப் பெற்றுக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதையும்,

(ii) ஆமெனின், எத்திகதியிலிருந்து என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0533/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கிழக்கு மாகாணத்தின், சியம்பலான்டுவை - அம்பாறை - காரைதீவு வீதியானது அபிவிருத்தி செய்வதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ளதொரு வீதியா என்பதையும்,

(ii) ஆமெனில், இவ்வீதி தற்போது அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றதா என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(ஆ) இவ்வீதியில் அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்றுவருமாயின்,

(i) அதன் நீளம் எத்தனை கிலோ மீட்டர்கள் என்பதையும்,

(ii) இதன் பணிகளை முடிவுறுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள திகதி யாதென்பதையும்,

(iii) இதற்காக மதிப்பிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவ்வீதியின் நிர்மாணப் பணிகளுக்காக கேள்ளிப் பத்திரம் கோரப்பட்டதா என்பதையும்,

(ii) ஆமெனில், கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பித்த நிறுவனங்களின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iii) அந்தந்த நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப்பத்திர விலைகள் யாவையென்பதையும்,

(iv) கேள்விப் பத்திரம் ஒப்படைக்கப்பட்ட நிறுவனம் மற்றும் குறித்த கேள்விப் பத்திரத் தொகை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) இவ்வீதியை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தத் தொகை உள்நாட்டு நிதியங்களிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(ii) இன்றேல் , வெளிநாட்டு உதவிகளிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(iii) வெளிநாட்டு உதவி பெறப்பட்டிருப்பின், உதவி வழங்கிய நாட்டின் பெயர் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

## 2010, நவெம்பர் 12, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0049/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) தென் மாகாணத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள மாவட்ட தள வைத்தியசாலைகளின் எண்ணிக்கையை வெவ்வேறாகவும்,

(ii) ஒரு மாவட்ட, தள வைத்தியசாலைகளில் இருக்க வேண்டிய பதவிகளின் ஆகக்குறைந்த எண்ணிக்கையையும்,

(iii) மேற்படி வைத்தியசாலைகள் ஒவ்வொன்றிலும் தற்போது இருக்கும் பதவிகளின் எண்ணிக்கையையும்,

(iv) மேற்குறிப்பிட்ட வைத்தியசாலைகள் ஒவ்வொன்றிலும் காணப்படும் பதவி வெற்றிடங்கள் எண்ணிக்கையை வெவ்வேறாகவும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி வைத்தியசாலைகள் ஒவ்வொன்றும் மாவட்ட வைத்தியசாலையாக தரமுயர்த்தப்பட்ட திகதியையும்,

(ii) அது யாரால் செய்யப்பட்டதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்படி வைத்தியசாலைகள் ஒவ்வொன்றிலும் காணப்படும் மனித மற்றும் பௌதீக வளப்பற்றாக்குறைகள் எக்கால வரையறைக்குள் தீர்க்கப்படும் என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0253/ '10

கௌரவ சஜித் பிரேமதாச,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் அம்பாந்தோட்டை வலயக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட லுனுகம்வெஹர கோட்டக் கல்வி அலுவலகத்தினால் நிர்வகிப்படும் அரசாங்க பாடசாலைகளில் கல்வி பெறும் மாணவர்களின் பரீட்சையில் சித்தியடையும் சதவீதம் குறைந்து வருகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி கல்வி வலயத்தில் 2007, 2008, 2009 ஆம் ஆண்டுகளில் க.பொ.த உயர் தரத்தில் சித்தியடைந்து பல்கலைக்கழக கல்வியைப் பெறுவதற்கு தகுதி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கையையும் அவர்களது பாடசாலைகளின் பெயர்களையும் தனித்தனியாக அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) வருட ஆரம்பத்தில் பாட புத்தகங்களும் ஆசிரியர்களுக்கான பாடவிதானங்களும் உரிய நேரத்தில் கிடைக்கப்பெறாமை மாணவர்களின் கல்வி நிலை வீழ்ச்சி அடைவதற்கு காரணமாயுள்ளதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்,

(ii) ஆமெனின், அம்மாணவர்களின் கல்வி நிலையை மேம்படுத்துவதற்கும் ஆற்றல்களை வளர்ப்பதற்கும் தேவையான பாட புத்தகங்களை உரிய நேரத்தில் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச் சபையில் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) மேற்படி பாடசாலைகளை உரிய முறையில் கண்காணிப்பதற்காக உரிய உத்தியோத்தர்களை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(ii) ஆமெனின், அதற்காக மேற்கொள்ளப்படும் வழிமுறைகள் யாவை என்பதையும்

அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0534/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கிழக்கு மாகாணத்தின், அக்கரைப்பற்று - சாகாமம் வீதியானது அபிவிருத்தி செய்வதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ளதொரு வீதியா என்பதையும்,

(ii) ஆமெனில், இவ்வீதி தற்போது அபிவிருத்தி செய்யப்படடு வருகின்றதா என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(ஆ) இவ்வீதியில் அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்றுவருமாயின்,

(i) அதன் நீளம் எத்தனை கிலோ மீட்டர்கள் என்பதையும்,

(ii) இதன் பணிகளை முடிவுறுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள திகதி யாதென்பதையும்,

(iii) இதற்காக மதிப்பிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவ்வீதியின் நிர்மாணப் பணிகளுக்காக கேள்ளிப் பத்திரம் கோரப்பட்டதா என்பதையும்,

(ii) ஆமெனில், கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பித்த நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்,

(iii) அந்தந்த நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப்பத்திர விலைகள் யாவையென்பதையும்,

(iv) கேள்விப் பத்திரம் ஒப்படைக்கப்பட்ட நிறுவனம் மற்றும் குறித்த கேள்விப் பத்திரத் தொகை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) இவ்வீதியை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தத் தொகை உள்நாட்டு நிதியங்களிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(ii) இன்றேல் , வெளிநாட்டு உதவிகளிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(iii) வெளிநாட்டு உதவி பெறப்பட்டிருப்பின், உதவி வழங்கிய நாட்டின் பெயர் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0565/ '10

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2004/14 உச்சம மட்டத்தில் தேங்கி நிற்றலிலான அநுகூலச் சுற்றறிக்கை, 2005/04 பதவியுயர்வுச் சுற்றறிக்கை மற்றும் 2008/45 பட்டப்படிப்பு பட்டமின்றியுள்ள பட்டதாரி ஆசிரியர்களுக்கு பதவியுயர்வு வழங்குதல் ஆகிய சுற்றறிக்கைகளின் பிரகாரம் மாத்தறை மாவட்டத்தின் நான்கு கல்வி வலயங்களைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு பதவியுயர்வுகள் வழங்கப்பட்டன என்பதையும்,

(ii) இதனோடு தொடர்புடைய நிலுவைச் சம்பளம் இற்றைவரை செலுத்தப்பட வில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) 2004/14, 2005/04 மற்றும் 2008/45 சுற்றறிக்கைகளுக்கிணங்க பதவியுயர்வுகள் வழங்கப்பட்டுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை மற்றும் அதற்கிணங்க நிலுவைச் சம்பளம் வழங்கப்பட்டுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவென்பதையும்,

(ii) இத்தருணமாகும் போது நிலுவைச் சம்பளம் கிடைக்க வேண்டிய ஆசிரியர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(iii) நிலுவைச்சம்பளம் அவர்களுக்கு செலுத்த வேண்டிய மொத்தப் பணத்தொகை எவ்வளவென்பதையும்,

(iv) இற்றைவரை நிலுவைச் சம்பளம் செலுத்தப்படாமைக்கான காரணம் யாதென்பதையும்,

(v) நிலுவைச் சம்பளம் செலுத்தி முடிக்கப்படும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0576/ '10

கௌரவ ஜோன் அமரதுங்க,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) ரத்தொழுகம வீடமைப்புத் தொகுதியின் எல்லையிலுள்ள கால்வாய்க்குக் குறுக்காக, ஏலத்தில் விடப்பட்ட காணியில் வசிக்கும் வணிக சிங்க என்பவருக்கு ஒரு பாதையைப் பெற்றுக் கொடுப்பதற்கு வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் முன்னாள் பொது முகாமையாளர் திட்டமிட்டிருந்தார் என்பதையும்,

(ii) அதிமேதகு ஜனாதிபதியிடம் வீட்டு உரிமையாளர்கள் முறைப்பாடு செய்தமைக்கமைய, வீடமைப்பு, நிர்மாணத்துறை அமைச்சின் செயலாளருக்கு ஜனாதிபதி செயலகத்தால் 2006.01.31 ஆம் திகதி அனுப்பப்பட்ட கடிதத்தின் மூலம் அந்தப் பாதையை மூடிவிடுவதற்கு கட்டளையிடப்பட்டதென்பதையும்,

(iii) முன்னாள் பொது முகாமையாளர் வனிகசிங்க ஊடாக பாராளுமன்ற ஆலோசனைக் குழுவிற்கு போலியான விடயங்களை சமர்ப்பித்து அந்த பாதையை பெற்றுக் கொடுப்பதற்கு திட்டமிட்டுள்ளார் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) வனிகசிங்க என்பவரின் வீட்டுக்கு முன்புறமாக அகலமானதொரு பாதை உள்ளதென்பதையும்,

(ii) வீட்டுக்குப் பின்புறமாகவும் ஒரு பாதையை பெற்றுக் கொடுக்க பற்றுச் சீட்டு மூலம் பணத்தைப் பெற்றுக்கொண்டு உறுதியொன்றை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதென்பதையும்,

(iii) இது பாராளுமன்ற வரலாற்றில் ஆலோசனைக் குழுவைத் தப்பான வழியில் இட்டுச் சென்ற முதல் சந்தர்ப்பமாகும் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) உரிய சகல அறிக்கைகளும் அதிகாரசபையின் தலைவரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளதால் அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் 2006.01.31 ஆம் திகதிய கடிதத்தின் விதப்புரைக்கு அமைய அந்தப் பாதையை மூடிவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0635/ '10

கௌரவ ஹேமால் குணசேக்கர,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 2009 ஆம் ஆண்டு மூடப்பட்ட பாடசாலைகளில்,

(i) ஆரம்பநிலை வகுப்புக்கள் மாத்திரம் நடைபெற்ற பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) சாதாரண தரம் வரை வகுப்புக்கள் நடைபெற்ற பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) உயர் தரம் வரை வகுப்புக்கள் நடைபெற்ற பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்

வெவ்வேறாக அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) அந்தப் பாடசாலைகள் மூடப்படுவதற்கான பிரதான காரணம் என்னவென்பதையும்,

(ii) இவ்வாறு பாடசாலைகள் மூடப்படுவதைத் தடுத்து நிறுத்த உத்தேச நடவடிக்கை ஏதேனும் இருக்கின்றதா என்பதையும்,

(iii) அவ்வாறெனின், அது யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0636/ '10

கௌரவ விஜய தஹநாயக்க,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இரசாயனப் பசளைகளுக்கு மாற்றீடாக சேதனப் பசளைகளின் பயன்பாடு மற்றும் உற்பத்தியை விவசாயிகளிடையே பிரபல்யப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) அவ்வாறாயின், அது யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) கிரிந்த புஹுல் எல்ல பிரதேச சபைக்குச் சொந்தமானதும் 56 இலட்சம் செலவில் நிர்மாணிக்கப்பட்டதுமான, குப்பைகளைப் பயன்படுத்தி கூட்டுப் பசளையைத் தியாரிக்கும் நிறுவனமானது மக்களின் எதிர்ப்பு காரணமாக தற்பொது மூடப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(இ) அதை மீண்டும் திறப்பதற்காக அவர் எடுக்கும் நடவடிக்கைகள் யவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0638/ '10

கௌரவ அருந்திக்க பர்னாந்து ,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) வில்பத்து வனப் பூங்காவின் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்திக் கருத்திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற பாதுகாப்பு மற்றும் அபிவிருத்திக் கட்டங்கள் யாவையென்பதையும்,

(ii) மேற்படி கருத்திட்டத்திற்கான மதிப்பிடப்பட்ட மொத்தச் செலவு யாதென்பதையும்,

(iii) கருத்திட்டத்தினை நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கும் அண்டு யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி கருத்திட்டத்தின் முடிவில் வனப் பூங்காவிலிருந்து ஈட்டுவதற்கு எதிர்பார்க்கும் வருடாந்த வருமானம் எவ்வளவு என்பதை அவர் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0639/ '10

கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண,— துறைமுகங்கள், விமானச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் மத்தல விமான நிலையத்தை நிர்மாணிப் பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தத் தொகை எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி நிர்மாணப்பணிக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலப்பரப்பின் அளவு எத்தனை ஹெக்ரயர் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) குறித்த நிர்மாணப்பணிகளுக்காக மேற்படி பிரதேசத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட வேண்டியுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி குடும்பங்களில் சட்டரீதியான குடியிருப்பாளர்களினதும் அனுமதியற்ற குடியிருப்பாளர்களினதும் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி குடும்பங்களுக்கு மாற்றுக் காணிகளை பெற்றுக் கொடுக்கும் செயற்திட்டமேதும் உண்டா என்பதையும்,

(iv) ஆமெனில், அது யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேமற்படி விமான நிலைய நிர்மாணப்பணிகளை நிறைவு செய்ய எதிர்பார்த்துள்ள வருடம் யாதென்பதையும்,

(ii) புதிய விமான நிலையத்தை நிர்மாணித்ததன் பின்னர் அதனை பயன்படுத்துபவர்கள் என எதிர்பார்க்கப்படுகின்ற வருடாந்த விமானப் பணிகளின் எண்ணிக்கை அண்ணளவாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்குக் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0050/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் (சிபிசி) உற்பத்தி செய்யப்படும் அல்லது இறக்குமதி செய்யப்படும் எல்லா உற்பத்திப் பொருட்களையும்,

(ii) வெவ்வேறுபட்ட ஒவ்வொரு பொருளினதும் செலவு (இலாபம் தவிர்ந்த விற்பனை விலை) மற்றும் செலவினது ஆக்கஅமைவின் விபரத்தையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கீழே தரப்பட்டவாறு, செலவினத்தின் (கிரயத்தின்) சகல கட்டங்களிலும் உள்ள எல்லா வரிகளையும்,

| | | |
|---|---|---|
| விற்பனை விலை | | x x x x x |
| உற்பத்திச் செலவு | x x x | |
| நிருவாகச் செலவு | x x x | |
| சந்தைப்படுத்தச் செலவு | x x x | |
| மூலதனச் செலவு | x x x | |
| விளம்பரப்படுத்தற் செலவு | x x x | x x x x x |
| மொத்த இலாபம் | x x x | x x x x x |
| வரிகளைக் கழிக்க | | |
| (எல்லா வகைகளும் வெவ்வேறாகக் குறிப்பிடலாம்) | | x x x x x |
| தேறிய இலாபம் | | |

(ii) கடந்த 15 வருடங்களுக்கான, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினதும் (சி.பி.சி.) அதன் துணைக் கம்பனிகளினதும் வருடாந்த இலாபத்தையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இதுவரை ரூபாவாக மாற்றப்படவிருக்கும் டொலர்கள் மீது வங்கிகளுக்கான மொத்தப் படுகடனையும்,

(ii) நாணய மாற்று இழப்பினை ஏற்றுக்கொள்பவர் யார் என்பதையும்,

(iii) மேலே (i) இல் உள்ளவாறு, விற்கப்பட்ட மொத்தத் தொகையையும் அதற்குரிய மொத்த நாணயப் பெறுமதியுடனும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0254/ '10

கௌரவ சஜித் பிரேமதாச,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் அம்பாந்தோட்டை வலயக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட திஸ்ஸமஹாராம கோட்டக் கல்வி அலுவலகத்தினால் நிர்வகிப்படும் அரசாங்க பாடசாலைகளில் கல்வி பெறும் மாணவர்களின் பரீட்சையில் சித்தியடையும் சதவீதம் குறைந்து வருகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி கல்வி வலயத்தில் 2007, 2008,2009 ஆம் ஆண்டுகளில் க.பொ.த உயர் தரத்தில் சித்தியடைந்து பல்கலைக்கழக கல்வியைப் பெறுவதற்கு தகுதி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கையையும் அவர்களது பாடசாலைகளின் பெயர்களையும் தனித்தனியாக அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) வருட ஆரம்பத்தில் பாட புத்தகங்களும் ஆசிரியர்களுக்கான பாடவிதானங்களும் உரிய நேரத்தில் கிடைக்கப்பெறாமை மாணவர்களின் கல்வி நிலை வீழ்ச்சி அடைவதற்கு காரணமாயுள்ளதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்,

(ii) ஆமெனின், அம்மாணவர்களின் கல்வி நிலையை மேம்படுத்துவதற்கும் ஆற்றல்களை வளர்ப்பதற்கும் தேவையான பாட புத்தகங்களை உரிய நேரத்தில் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச் சபையில் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) மேற்படி பாடசாலைகளை உரிய முறையில் கண்காணிப்பதற்காக உரிய உத்தியோத்தர்களை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(ii) ஆமெனின் அதற்காக மேற்கொள்ளப்படும் வழிமுறைகள் யாவை என்பதையும்

அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0535/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கிழக்கு மாகாணத்தின், சியம்பலாண்டுவ - பொத்துவில் - அக்கரைப்பற்று வீதியானது அபிவிருத்தி செய்வதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ளதொரு வீதியா என்பதையும்,

(ii) ஆமெனில், இவ்வீதி தற்போது அபிவிருத்தி செய்யப்படடு வருகின்றதா என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(ஆ) இவ்வீதியில் அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்றுவருமாயின்,

(i) அதன் நீளம் எத்தனை கிலோ மீட்டர்கள் என்பதையும்,

(ii) இதன் பணிகளை முடிவுறுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள திகதி யாதென்பதையும்,

(iii) இதற்காக மதிப்பிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவ்வீதியின் நிர்மாணப் பணிகளுக்காக கேள்ளிப் பத்திரம் கோரப்பட்டதா என்பதையும்,

(ii) ஆமெனில், கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பித்த நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்,

(iii) அந்தந்த நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப்பத்திர விலைகள் யாவையென்பதையும்,

(iv) கேள்விப் பத்திரம் ஒப்படைக்கப்பட்ட நிறுவனம் மற்றும் குறித்த கேள்விப் பத்திரத் தொகை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) இவ்வீதியை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தத் தொகை உள்நாட்டு நிதியங்களிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(ii) இன்றேல் , வெளிநாட்டு உதவிகளிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(iii) வெளிநாட்டு உதவி பெறப்பட்டிருப்பின், உதவி வழங்கிய நாட்டின் பெயர் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0255/ ‘10

கௌரவ சஜித் பிரேமதாச,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் அம்பாந்தோட்டை வலயக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட அம்பாந்தோட்டை கோட்டக் கல்வி அலுவலகத்தினால் நிர்வகிப்படும் அரசாங்க பாடசாலைகளில் கல்வி பெறும் மாணவர்களின் பரீட்சையில் சித்தியடையும் சதவீதம் குறைந்து வருகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி கல்வி வலயத்தில் 2007, 2008,2009 ஆம் ஆண்டுகளில் க.பொ.த உயர் தரத்தில் சித்தியடைந்து பல்கலைக்கழக கல்வியைப் பெறுவதற்கு தகுதி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கையையும் அவர்களது பாடசாலைகளின் பெயர்களையும் தனித்தனியாக அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) வருட ஆரம்பத்தில் பாட புத்தகங்களும் ஆசிரியர்களுக்கான பாடவிதானங்களும் உரிய நேரத்தில் கிடைக்கப்பெறாமை மாணவர்களின் கல்வி நிலை வீழ்ச்சியடைவதற்கு காரணமாயுள்ளதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்,

(ii) ஆமெனின், அம்மாணவர்களின் கல்வி நிலையை மேம்படுத்துவதற்கும் ஆற்றல்களை வளர்ப்பதற்கும் தேவையான பாட புத்தகங்களை உரிய நேரத்தில் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச் சபையில் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) மேற்படி பாடசாலைகளை உரிய முறையில் கண்காணிப்பதற்காக உரிய உத்தியோத்தர்களை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(ii) ஆமெனின் அதற்காக மேற்கொள்ளப்படும் வழிமுறைகள் யாவை என்பதையும்

அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0436/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) வடக்கு, கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் இயங்கிக் கொண்டிருக்கும் பல்கலைக்கழககங்களின் எண்ணிக்கையையும்,

(ii) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்ட பல்கலைக்கழகங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையையும்,

(iii) பல்கலைக்கழகத்தின் பீட வாரியாக மாணவர் ஒருவருக்கான செலவையும்,

(iv) அப்பல்கலைக்கழகங்களில் தொழில் புரியும் விரிவுரையாளர்களின் எண்ணிக்கையையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஒவ்வொரு பல்கலைக்கழகத்தினதும் வருடமொன்றிற்கான பல்கலைக் கழகத்தினதும் வருடமொன்றிற்கான கல்வி நடவடிக்கை நாட்களின் எண்ணிக்கையையும்,

(ii) கடந்த 3 வருடங்களில் அப்பல்கலைக்கழகங்கள் யதார்த்தபூர்வமாக இயங்கிய நாட்களின் எண்ணிக்கையையும் வருடவாரியாகவும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0536/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கிழக்கு மாகாணத்தின், பொத்துவில் - பாணம வீதியானது அபிவிருத்தி செய்வதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ளதொரு வீதியா என்பதையும்,

(ii) ஆமெனில், இவ்வீதி தற்போது அபிவிருத்தி செய்யப்படடு வருகின்றதா என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(ஆ) இவ்வீதியில் அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்றுவருமாயின்,

(i) அதன் நீளம் எத்தனை கிலோ மீட்டர்கள் என்பதையும்,

(ii) இதன் பணிகளை முடிவுறுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள திகதி யாதென்பதையும்,

(iii) இதற்காக மதிப்பிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவ்வீதியின் நிர்மாணப் பணிகளுக்காக கேள்ளிப் பத்திரம் கோரப்பட்டதா என்பதையும்,

(ii) ஆமெனில், கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பித்த நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்,

(iii) அந்தந்த நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப்பத்திர விலைகள் யாவையென்பதையும்,

(iv) கேள்விப் பத்திரம் ஒப்படைக்கப்பட்ட நிறுவனம் மற்றும் குறித்த கேள்விப் பத்திரத் தொகை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) இவ்வீதியை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தத் தொகை உள்நாட்டு நிதியங்களிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(ii) இன்றேல் , வெளிநாட்டு உதவிகளிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(iii) வெளிநாட்டு உதவி பெறப்பட்டிருப்பின், உதவி வழங்கிய நாட்டின் பெயர் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

கௌரவ ரவி கருணாநாயக்க,— சனாதிபதி மற்றும் பிரதம அமைச்சர் ஆகியோர் அமைச்சரவை அமைச்சுப் பதவிகளை வகித்தல் பொருத்தமானதல்ல,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஒற்றோபர் 08, 2010) "வினைத்திறமை மிக்கதோர் நிர்வாகத்தை மேற்கொள்ளுமுகமாகவும் அமைச்சர்களது செயற்பாடுகளை விமர்சனரீதியாக ஆய்வு செய்வதற்கும் ஏதுவான வகையில் சனாதிபதி மற்றும் பிரதம அமைச்சர் ஆகியோர் எந்தவொரு அமைச்சரவை அமைச்சுப் பதவியையும் வகித்தல் பொருத்தமானதல்லதென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப் பெற்றது. [பா.1/ '10]

பா.4/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஊடகவியலாளர்களுக்கு, அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (COPE) அரசாங்கக் கணக்குக்குழு (PAC) மற்றும் ஆலோசனைக் குழுக்கூட்டங்கள் அனைத்திலும் பிரசன்னமாயிருக்க அனுமதியளித்தல்,— அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (COPE) அரசாங்கக் கணக்குக்குழு (PAC) மற்றும் ஆலோசனைக்குழுக் கூட்டங்களில் இதுபோன்ற கலந்துரையாடல்கள் மிக விளைபயனுடையதாகவும் அர்த்தபுஷ்டியுள்ளதாகவும் வெளிப்படையானதுமாக அமைய ஏதுவாக இருக்கும் என்பதால், ஊடகவியலாளர்களுக்கு அதில் பிரசன்னமாயிருக்க அனுமதியளிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.5/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— சுயதொழிலாக கமத்தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு விவசாயக் கடனுதவிகளை அளித்தல்,— சுயதொழிலாக கமத்தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு விவசாயக் கடனுதவியாக அதிகபட்ச கடனாக 2,50,000 ரூபாவை 5% குறைந்த வட்டி வீதத்தில் வழங்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.6/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொலித்தீன், பிளாஸ்டிக் போன்ற கழிவுப் பொருட்களை அழித்துவிடுவது தொடர்பான பொதுமக்களுக்கு அறிவூட்டுமுகமாக நாடளாவிய ரீதியிலான நிகழ்ச்சித்திட்டமொன்றினை அமுலாக்குதல்,— நாட்டினுள் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் போன்றவற்றின் பாவனை வேகமாக அதிகரித்து வருவதாலும் அவ்வாறான கழிவுப் பொருட்களை பாரதூரமின்றி அகற்றுவதனால் ஏற்படும் பாரியளவு சுற்றாடல் மாசுபடுதல் நிமித்தமும் பொலித்தீன், பிளாஸ்டிக் போன்ற கழிவுப் பொருட்களை அழித்துவிடுவது தொடர்பாக பொதுமக்களுக்கு அறிவூட்டுமுகமாக நாடளாவிய ரீதியிலான நிகழ்ச்சித்திட்டமொன்றினை அமுலாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.7/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரச வங்கிகளிலிருந்து கடன் வாங்கி மீள செலுத்தத் தவறியவர்களின் பெயர்களை வெளியிடுதல்,— அரச வங்கியிலிருந்து ரூபா 100 மில்லியனுக்கு மேற்பட்ட கடன் வாங்கி மீள செலுத்தத் தவறியவர்களின் பெயர்களை வெளியிடுவதற்காக சட்ட ஏற்பாடுகளை அறிமுகப்படுத்த வேண்டுமென்று இப்பாராளு மன்றம் தீர்மானிக்கின்றது.

பா.8/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— தனியார் உறுப்பினர்களின் பிரேரணைகள் செயற்படுத்தல்,— பாராளுமன்றத்தில் பிரேரிக்கப்படும் தனியார் உறுப்பினர்களின் பிரேரணைகள் பாராளுமன்ற உறுப்பினர்களின் பயனுள்ள பங்களிப்பொன்றாக அமைவதற்கு ஏதுவாக அவைகள் ஒரு வருடத்துக்குள் விவாதிக்கப்பட வேண்டுமென்றும் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டால் ஆறு மாதங்களுக்குள் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.9/ ‘10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பாராளுமன்றத்தில் தேசிய கீதம் இசைத்தல்,— நாட்டில் தேசிய மனப்பாங்கை ஏற்படுத்துமுகமாக பாராளுமன்ற அமர்வு ஆரம்பமாக முன்னரும் ஒத்திவைக்க முன்னரும் பாராளுமன்றத்தில் தேசிய கீதம் இசைக்க வேண்டு மென்றும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.10/ ‘ 10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பலமான இலங்கை அடையாளத்தை ஏற்படுத்துதல்,— அரச ஆவணங்களில் ஒருவரது சாதியையும் சமயத்தையும் வெளிப்படுத்த வேண்டுமென்ற தேவைப்பாடு பலமான தேசிய அடையாளத்தை ஏற்படுத்துவற்கு தடையாகவும் இடர்ப்பா டகவுமுள்ளதால் இத்தேவைப்பாட்டிலிருந்து விலக்களிக்கப்பட வேண்டுமென்று இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.11/ ‘10

கௌரவ ரவி கருணாநாயக்க,— வர்த்தக நோக்கங்களுக்காக சமயத் தலைவர்களின் உருவங்களை பயன்படுத்துவதை தடைசெய்தல்,— சகல சமயங்களும் சமமாக மதிக்கப்படல் வேண்டுமென்பதுடன் புத்தபெருமான், யேசுநாதர், சிவபெருமான், முஹம்மட் நபி (ஸல்) அவர்கள் ஆகியோரின் உருவங்களை வர்த்தக விளம்பரங்களிலோ வேறுவிதமான சமயசார்பற்ற படிவங்களிலோ பயன்படுத்தலை தடைசெய்தலும் வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.12/ ‘10

கௌரவ ரவி கருணாநாயக்க,— நீதிமன்றங்களை அவமதித்தல் நடைமுறைகளை ஒழுங்குபடுத்துவதற்கான புதிய சட்டங்களை ஆக்குதல்,— சகலருக்கும் சமமான நியாயத்தை உறுதிப்படுத்துவதற்காக சனநாயகத்தை வலுப்படுத்துவதற்கு பலமான சுதந்திர ஊடகவியலை ஏற்படுத்துவதற்கும் நீதிமன்றங்களை அவமதித்தல் நடைமுறை களை ஒழுங்குபடுத்துவதற்கான புதிய சட்டங்களை ஆக்க வேண்டுமென்று இப்பாராளு மன்றம் தீர்மானிக்கின்றது.

பா.13/ ‘10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொதுமக்களின் நலனுக்கான சட்டநடவடிக்கை களுக்காக சட்டங்களை அறிமுகப்படுத்தல்,— வறிய மக்களின் அடிப்படை உரிமைகள் மீறுதல், அரசாங்க கொள்கைகளில் உள்ளடக்கம் மற்றும் நடாத்துதல், மாநகர சபைகள் அதிகாரிகளினால் பொதுக் கடமைகள் நிறைவேற்றுதல், சமய உரிமைகள் அல்லது அடிப்படை உரிமைகள் மீறுதல் மற்றும் பொதுமக்களை கடனாளிகளாக்குகின்ற அல்லது அவர்களுக்கு மேலதிக பொறுப்புகள் ஏற்படுத்துகின்ற ஊழல்கள் ஆகியவை தொடர்பில் பொதுமக்களின் நலனுக்கான சட்டநடவடிக்கைகளுக்காக சட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.14/ ‘10

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரசியல் கட்சிகளினால் தேர்தல் ஆணைக்குழுவுக்கு நிதி கணக்காய்வு அறிக்கைகள் சமர்ப்பித்தல்,— எல்லா அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளினாலும் பெறப்பட்ட வருமானமும் செலவிடப்பட்ட செலவினமும் பற்றிய கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டுமெனவும் வருடம் தோறும் தேர்தல் ஆணைக் குழுவுக்கு சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.15/ ’10

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரச அலுவலர்களுக்கு தண்டனை வழங்குதல்,— அரச உயர் அலுவலர்கள் தமது சுதந்திர நிலைமையை அரசியல் மயமாக்கி மற்றும் அவர்கள் முறைகேடாக நடந்தால் அதனால் அவர்கள் குற்றவாளிகளாக கண்டுபிடிக்கப்பட்டால் அவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுப் பத்திரங்களை கையளித்து தண்டனை விதிக்கப்பட வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.16/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஓய்வு பெறும் வயதெல்லையை நீடித்தல்,— அரச அலுவலர்களின் ஓய்வு பெறும் வயதெல்லை 65 வருடம்வரை நீடிக்கப்பட வேண்டுமென்றும் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டால் விசேட திறமையுள்ள அரச அலுவலர்களின் ஓய்வு பெறும் வயதெல்லை 70 வருடம்வரை நீடிக்கப்பட வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.17/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— கல்வியைப் பாதுகாப்பதற்காக தரப் பாதுகாப்பு பேரவையொன்றை நிறுவுதல்,— பொறுப்பற்ற முறையில் பல்கலைக்கழக பெயர்களை பாவித்து இலங்கையினுள் பல கல்வி நிறுவனங்கள் உருவாக்கப்படுவதனால் கல்வியை எதிர்கால சந்ததியினருக்காக பாதுகாப்பதற்காக "தரப் பாதுகாப்பு பேரவையொன்றை" சட்டத்தின் மூலம் உடனடியாக நிறுவ வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.18/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— 'விசேட வழக்குத் தொடுநர்' எனப்படும் பதவியொன்றை உருவாக்குதல்,— அரச சேவை அரசியல் தலையீடுகளிலிருந்து விலக்குவதற்காக சுதந்திர ஆணைக்குழுக்கள், அரசாங்க கணக்குக் குழு, அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழு ஆகியவற்றினால் நிறுவனங்களில் செயற்றிறமை பாதிக்கின்ற மோசடிகள், ஊழல்கள், செயற்திறமையில்லாமை ஆகியவற்றை கண்டுபிடித்த உடனே பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்காக அவற்றுக்கெதிராக வழக்குத் தொடுக்கப்படுவதற்கு "விசேட வழக்குத் தொடுநர்" எனப்படும் பதவியொன்று உருவாக்கப்பட வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.19/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— வரவு செலவுத்திட்டம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் பூர்வாங்க வரவு செலவுத்திட்ட விவாதமொன்று நடாத்துதல்,— இந்தியா மற்றும் ஐக்கிய இராச்சியத்தில் போன்று, வரவு செலவுத்திட்டம் நிறைவேற்றப்படுவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளிலுள்ள எதிரானதும் சார்பற்றதுமான தாக்கல்கள் ஏதும் இருப்பின் அவைகளை நிவர்த்தி செய்வதற்கும் தணிப்பதற்கும் பூர்வாங்க வரவு செலவுத்திட்ட விவாதமொன்று நடாத்தப்பட வேண்டு மென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.20/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பணவீக்கத்திற்குப் பொருத்தமான வகையில் 1% கொடுப்பனவு ஒன்று ஊழியர்களுக்கு செலுத்துதல்,— அரச நிறுவனங்களினால் நிர்வகிக்கப்படும் ஊழியர் சேமலாப நிதிய மற்றும் ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதிய பணங்களை செலுத்துவதில் ஒவ்வொரு வருடத்திற்கான பணவீக்க அளவுக்கு மேலதிகமாக 1% கொடுப்பனவு ஒன்று ஊழியர்களுக்கு செலுத்துவதை உறுதிப்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.21/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— சிரேஷ்ட பிரசைகளுக்கு இலவச பயண வசதிகள் ஏற்பாடு செய்தல்,— சகல சிரேஷ்ட பிரசைகளுக்கும் பொதுப்போக்குவரத்துச் சேவைகளில் இலவச பயண வசதிகளை ஏற்பாடு செய்துதர வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.22/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— தகராறுகள் தீர்க்கும் நிலையமொன்றை உருவாக்குதல்,— பல இன, மத மக்கள் வாழும் இலங்கையில் சமாதானத்திற்கு பங்கம் ஏற்படும் சவால்களை எதிர்நோக்குகின்றமையினால் அவைகளை இலங்கையிலும், பிராந்தியத்திலும் மற்றும் முழு உலகத்திலும் தீர்ப்பதற்காக பௌத்த, கிறிஸ்தவ, இந்து மற்றும் இஸ்லாம் ஆகிய மதங்களின் ஒழுக்க நெறிகளைக் கொண்ட, தகராறுகள் தீர்க்கும் நிலையமொன்றை உருவாக்க வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.23/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஓய்வு ஆகிய பணிக்கொடையை தாமதமின்றி பெற்றுக்கொடுத்தல்,— இதுவரை ஓய்வூதியப் பணிக்கொடையைப் பெற்றிராத ஓய்வு பெற்றவர்களுக்கு அப்பணிக்கொடையை தாமதமின்றி பெற்றுக்கொடுப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.24/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேசிய கொள்கையாக்க சபை ஒன்றினை நியமித்தல்,— முறைசார் தேசிய கொள்கை மற்றும் திட்டவாக்கம் தொடர்பில் அரசியல்வாதிகள், மற்றும் விடயம்சார் அதிகாரிகளைக் கொண்டதும் அரசாங்கம் மாறும்போது மாறாததுமான விசேட அதிகாரங்களைக் கொண்ட தேசிய கொள்கையாக்க சபையொன்று நியமிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.25/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டில் வேலை செய்பவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல் தொடர்பில் சட்ட அதிகாரங்களைக் கொண்டதோர் அலகை ஏற்படுத்தல்,— வெளிநாடுகளில் வேலைசெய்வோர்கள் முகம் கொடுக்க வேண்டி ஏற்படுகின்ற தாக்குதல்கள், ஆட்கடத்தல், கற்பழிப்பு, பெண்களை இழிதொழிலில் ஈடுபடுத்தல், ஆட்கொலைகள் மற்றும் வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்பு தொடர்பில் செல்லும்போது இடம்பெறுகின்ற மோசடிகள், வெளிநாடுகளில் அகதிகளாக்கப்பட்டுள் ளவர்களை திரும்ப அழைத்துக்கொள்ளல் மற்றும் அவர்களின் பாதுகாப்பு தொடர்பில் செயற்படக்கூடிய சட்ட அதிகாரங்களைக் கொண்டதோர் அலகு ஏற்படுத்தப்பட வேண்டு மென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.26/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— புதிய கண்டுபிடிப்பாளர்களை உலகிற்கு அறிமுகப்படுத்து முகமாக தேசிய திட்டமொன்றினை உருவாக்குதல்,— புதிய கண்டுபிடிப்பாளர்களையும் பலதரப்பட்ட திறமைகளைக்கொண்ட பிரசைகளையும் உலகத்திற்கு அறிமுகப்படுத்து வதற்காகவும் அவர்களது திறமைகள் உருவாக்கங்களை மேம்படுத்துவதற்காகவும் தேசிய திட்டமொன்றினை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.27/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— உள்ளூர் மூலவளங்களை பயன்படுத்தும் கைத்தொழிலாளர்களுக்கு வரிச்சலுகைகள் வழங்கல்,— உலகச் சந்தைக்காக 75% உள் நாட்டு மூலவளங்களைப் பயன்படுத்தி உற்பத்திகளை மேற்கொள்ளும் உள்நாட்டு கைத்தொழிலாளர்களுக்கு 2 வருடகால வரிச்சலுகை வழங்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.28/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— தோட்ட சமுதாயத்திற்கு பிரசாவுரிமை வழங்குதல்,— இலங்கைப் பிரசாவுரிமையற்ற சகல தோட்டப்புற மக்களிற்கும் அவர்களது விருப்பத்தின் பேரில் பிரசாவுரிமை வழங்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.29/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— தீவிலேயுள்ள ஆரம்பப் பாடசாலை மாணவர்களிற்கு ஒரு கோப்பைப் பால் வழங்குதல்.— தீவிலேயுள்ள சகல ஆரம்பப் பாடசாலை மாணவர்களிற்கும் காலையில் இலவசமாக ஒரு கோப்பை பால் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.30/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியங்களை ஒரு வாரகாலத்தினுள் விண்ணப்பதாரிகளுக்கு பெற்றுக் கொடுத்தல்,— ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியங்களை மீளப்பெற விண்ணப்பிப்பவர்களுக்கு ஒரு வார காலத்தினுள் அவற்றைப் பெற்றுக் கொடுப்பதற்கு உரிய திட்டமொன்றினை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது

பா.31/ ’10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பாடசாலை மாணவர்களுக்கு இலவசப் பயணச் சீட்டு வழங்குதல்,— பாடசாலை மாணவர்கள் வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை பேரூந்துகளில் பிரயாணம் செய்வதற்காக இலவச பயணச்சீட்டுக்களை வழங்குகின்ற முறையொன்றினை அறிமுகப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.32/ ’10

கௌரவ ரவி கருணாநாயக்க,— விளையாட்டுப் பாடசாலைகளை அமைத்தலும் தேசிய விளையாட்டுக் கொள்கையினை வகுத்தலும்,— நீண்ட கால இலக்குடைய தேசிய விளையாட்டுக் கொள்கையினை வகுப்பதற்கான நடிவடிக்கைகளை எடுப்பதற்கான முதல் கட்டமாக சகல மாவட்டங்களையும் உள்ளடக்கூடிய வகையில் விளையாட்டரங்கு, விளையாட்டு மைதானம், விளையாட்டு உபகரணங்கள், விளையாட்டு போதனாசிரியர் களைக் கொண்ட உயர் மட்ட விளையாட்டுப் பாடசாலைகளை அமைக்க வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.33/ ’10

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேசிய மொழிகளிற்கான கல்விப் பீடமொன்றினை நிர்மாணித்தல்,— ஆசிரியர்களிற்கு சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளை கற்பிப்பதற்காக தேசிய மொழிகளிற்கான கல்விப்பீடமொன்றினை நிர்மாணிக்க வேண்டும் என்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.34/ ’10

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— புத்தளம் மாவட்டத்தில் கைத்தொழில் பேட்டைகளை தாபித்தல்,— புத்தளம் மாவட்டத்தில் கைத்தொழில்களை மேம்படுத்தும் நோக்கிலும் இளைஞர்களுக்கு தொழில்வாய்ப்புக்களை வழங்குவதற்காகவும் மாவட்டத்தில் பொருத்தமான அமைவிடங்களில் கைத்தொழில் பேட்டைகள் அமைக்கப்பட வேண்டும் என்றும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.35/ ’10

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— கல்முனை நகரத்தில் சாத்தங்கேனி பொது விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்தல்,— திகாமடுல்ல மாவட்டத்தின் இளைஞர்களுக்கு உயர்தரத்திலான வசதிகளை வழங்கும் பொருட்டும் பல்வேறு துறைசார்ந்த விளையாட்டுக்களிலும் அவர்களது திறமைகள், ஆற்றல் என்பவற்றை மேம்படுத்தும் பொருட்டும் சர்வதேச விளையாட்டு மைதானமொன்றாக அனைத்து துறைகளிலும் சாத்தங்கேனி பொது விளையாட்டு மைதானம் விருத்திசெய்யப்பட வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.39/ ’10

கௌரவ அஜித் குமார,— கேகாலை மாவட்டத்தில் நூதனசாலையொன்றினை தாபித்தல்,— கேகாலை மாவட்டத்தில் உள்ள புராதன, கலாசார, தேசிய விழுமியங்கள் தொடர்பில் தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையிலும் தொல்பொருட்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையிலுமாக நூதனசாலையொன்று தாபித்தல் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.40/ ’10

கௌரவ அஜித் குமார,— நீதித்துறை, பொலிஸ் மற்றும் சிறைச்சாலை ஆகியவற்றை ஒன்றிணைத்து சனாதிபதி ஆணைக்குழுவொன்றினை நியமித்தல்,— சமூகத்தில் வியாபித்து வரும் குற்றச் செயல்களை குறைப்பதற்காகவும், குற்றவியல் சட்டங்களில் உள்ள குறைபாடுகளைக் குறைத்து அதனை மேம்படுத்தியும் காணித் தகராறுகள் உட்பட நீதிமன்றங்களில் குவிந்திருக்கும் விசாரணைகளின் தேக்க நிலையை நீக்குவதற்காகவும் மற்றும் நீதித்துறை, பொலிஸ், சிறைச்சாலை ஆகியவற்றினை நவீன மயப்படுத்தி துரித சேவைகளை வழங்குதனை நோக்கமாகவும் கொண்டு நீதித்துறை, பொலிஸ், சிறைச்சாலை ஆகிவற்றை ஒன்றிணைத்து சனாதிபதி ஆணைக்குழு வொன்றினை நியமிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.41/ '10

கௌரவ அஜித் குமார,— அரசியல் பழிவாங்கல்களுக்கு உள்ளானவர்களுக்கான நிவாரணம் அளிக்குமுகமாக சனாதிபதி ஆணைக்குழு,— ஆரம்ப காலம் முதல் இன்றுவரை தாம் கொண்ட அரசியல் கொள்கை காரணமாக அரசியல் பழிவாங்கல்களுக்கு உள்ளானவர்களின் முறைப்பாடுகளை விசாரணை செய்து நிவாரணம் வழங்குவதற்காக பூரண அதிகாரமுடைய சனாதிபதி ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.42/ '10

கௌரவ அஜித் குமார,— 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, கமத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தைத் திருத்துதல்,— இலங்கையில் கமத்தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் காணி உரிமை பலவித உரிமங்களின் கீழ் வருவதுடன் மேற்படி சட்டத்தினால் வாரப் பயிர்ச்செய்கை முறை ஒழிக்கப்பட்டதனால் தாங்கள் கமத்தொழிலில் ஈடுபட்டுள்ள காணிகளையும் இழக்க நேர்ந்துள்ளதனாலும் சட்டத்தினால் பாதுகாப்பு இல்லாததால் பலவித காணித்தகராறுகள் ஏற்படுகின்றதனாலும் வாரப்பயிர்ச் செய்கையாளர்களுக்கு ஏற்பட்ட அநீதியை ஒழிப்பதற்காக 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, கமத்தொழில் அபிவிருத்தி சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று இப்பாராளு மன்றம் தீர்மானிக்கின்றது.

பா.43/ '10

கௌரவ அஜித் குமார,— உஸ்ஸன்கொட மலைத்தொடர் அமைந்துள்ள நிலப் பரப்பைப் பேணிப் பாதுகாத்தல்,— வரலாற்றுக்கு முந்திய யுகத்தில் மத்திய முன்னைய காலத்திற்குரியதென இனங்காணப்பட்டுள்ளதும் தென் மாகாணத்தில் அம்பலாந்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவில் கடற்கரையோரத்தில் அமைந்துள்ளதும் தென்னிலங்கையின் ஹோர்டன் சமவெளி எனப் பிரபல்யமடைந்துள்ளதுமான உஸ்ஸன்கொட மலைத்தொடர் அமைந்துள்ள நிலப்பரப்பு, இலங்கையில் இருபத்தெட்டாயிரம் வருடங்கள் பழமை வாய்ந்த திறந்த வெளிக் குடியேற்றமொன்றின் கேத்திரவடிவ ஆயுதங்களும் பாறைகளும் கண்டுபிடிக்கப்பட்ட நிலப்பகுதியாகவும் கடல் மற்றும் தரை உயிரியல் பல்வகைத் தன்மையில் பெருமளவு வளங்கள் நிறைந்த நிலப்பகுதியாகவும், சிறந்த கடலாமைகளின் வாழ்விடமாகவும், சுனாமிப் பேரலையினால் மக்களைப் பாதுகாத்த மதிலாகவும் அதிக பெறுமதியை கொண்டிருப்பதனால் இந்நிலப்பகுதியில் ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள கருத்திட்டங்களை நிறுத்தி விட்டு உடனடியாகப் பேணிப் பாதுகாக்க வேண்டிய சுற்றாடல் தொகுதியொன்றாக பிரகடனப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.44/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரசாங்க தகவல்களை சுதந்திரமாக பெற்றுக் கொள்வதற்காக சட்டங்களை இயற்றுதல்,— அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மையை பேணுவதற்கும் பொதுமக்கள் அனைத்து அரசாங்க தகவல்களையும் சுதந்திரமாக பெற்றுக் கொள்வதற்கான உரிமைக்காகவும் பாராளுமன்றத்தில் சட்டங்கள் இயற்றப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.45/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— இலங்கையர்களுக்கு மிகவும் சிறந்த சுகாதார வாய்ப்புக்களை வழங்குதல்,— மக்களில் அதிகமானோர் இருதய சத்திரசிகிச்சை செய்ய வேண்டிய தேவை உடையவர்களாய் இருப்பதால் இலங்கையர்களுக்கு மிகவும் சிறந்த சுகாதார வாய்ப்புக்களை வழங்க வேண்டியிருப்பதாலும் அதற்காக தனியார் துறை ஊழியர்களுக்கு ஊழியர் சேமலாப நிதியம் அல்லது ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தினூடாக இலவசமாக வசதிகளை செய்துகொடுக்க வேண்டும் என்றும் அரசாங்க ஊழியர்கள் அல்லது தொழிலற்றோருக்கு அதற்கான முழு செலவையும் அரசாங்கத்தினால் சனாதிபதி நிதியத்தினூடாக வழங்குதல் வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.46/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— உலக சுற்றாடலை பாதுகாத்தல்,— இலங்கை உலக சுற்றாடலை பாதுகாக்கும் பொருட்டு கூடிய கவனம் செலுத்த வேண்டுமென்பதோடு புவி வெப்பமாதலை தவிர்ப்பதற்காக குறிப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.47/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பாராளுமன்ற நடவடிக்கைகளை ஒளிபரப்புதல்,— தொலைக்காட்சி அல்லது இணையம் மூலமாக பாராளுமன்ற நடவடிக்கைகள் நேரடியாக அல்லது தணிக்கை செய்யப்பட்டு ஒளிபரப்பப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.48/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாடுகளில் வசிக்கின்ற இலங்கையர்களுக்கு வாக்களிப்பதற்கான அனுமதியை வழங்குதல்,— வெளிநாடுகளில் வசிக்கின்ற இலங்கையர் களுக்கு எதிர்கால தேர்தல்களில் வாக்களிப்பதற்கு அனுமதி வழங்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.49/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— இலத்திரனியல் வாக்களிப்பு முறைமையினை அறிமுகப்படுத்துதல்,— தற்போதுள்ள பழைமையான வாக்களிப்பு முறைமைக்குப் பதிலாக இலத்திரனியல் வாக்களிப்பு முறைமையொன்று அறிமுகப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.50/ '10

கௌரவ அஜித் குமார,— இலங்கையில் மிகப் பெறுமதியான இயற்கை வளங்கள் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களை பாதுகாப்பதற்காக முறையான விஞ்ஞான ரீதியிலான திட்டமொன்றை நடைமுறைப்படுத்தல்,— இலங்கையில் மாத்திரமல்லாது உலகிலேயே மிக முக்கியமான இயற்கை வளமாகக் கருதப்படும் சிங்கராஜ காடு, கன்னெலிய பாதுகாப்பு வனம், ரூமஸ்சல கந்த, கொக்கல ஓயா தீவுக் கூட்டல்கள் மற்றும் கண்டல் மரங்கள், மாது கங்கை, ரம்சா ஈரழிப்பு நிலம் மற்றும் அதனை அண்மித்த பிரதேசங்கள் என்பவற்றை பாதுகாப்பதற்கும் அவற்றை மேம்படுத்துவதற்கும் முறையான விஞ்ஞான ரீதியிலான திட்டமொன்றை நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.51/ '10

கௌரவ அஜித் குமார,— காலி கோட்டை மற்றும் அதனை அண்டியுள்ள வரலாற்று ரீதியான மற்றும் தொல்பொருள் மரபுரிமைகளைப் பாதுகாத்தல், மேம்படுத்தல் மற்றும் உரிய பயனைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்தல்,— சுற்றுலா கைத்தொழில் துறையின் மிக முக்கியமான மையமாகவும், வரலாற்று மற்றும் தொல்பொருள் ரீதியில் பெறுமதியைக்கொண்டதும், உலக மரபுரிமையாகக் கருதப்படுகின்றதுமான காலி கோட்டை மதில், காலி கோட்டையின் உள்பகுதியிலும் காலி கோட்டையை அண்டியும் அமைந்துள்ள வரலாற்று மற்றும் தொல்பொருள் ரீதியான மரபுரிமைகளைப் பாதுகாப்பதற்கும், மேம்படுத்துவதற்கும் அவற்றுடன் தொடர்புடைய அரச நிறுவனங்களினதும் மக்களினதும் பங்கேற்புடன் முறையான திட்டமொன்றை நடைமுறைப்படுத்தி இந்த வரலாற்று ரீதியான மரபுரிமைகளின் உரிய பயனை நமது நாடு பெற்றுக்கொள்ளும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.52/ ’10

கௌரவ திலங்க சுமதிபால,— இலங்கையில் குறைந்த வசதிகளுடன் கூடிய வீடுகளில் வாழ்கின்ற வீட்டுரிமையாளர்களின் வீட்டுப் பிரச்சினையைதீர்ப்பதற்கான நடைமுறைச் சாத்தியமான நிகழ்ச்சித்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துதல்,— இலங்கையில் வாழும் அனைத்துக் குடும்பங்களுக்கும் அவர்களின் அடிப்படைத் தேவைகளாகிய குடிநீர், மின்சாரம், மலசலகூட வசதிகள் மற்றும் சமையலறை என்பவற்றை உள்ளடங்கிய வீடொன்றில் வதிவதற்கான உரிமையை உறுதிப்படுத்தும் பொருட்டு “மஹிந்த சிந்தனை” எதிர்கால நோக்கின் கீழ் மாடிவீடுகளையும் கொத்தணி மாடி வீடமைப்புத் திட்டங்களையும் கொழும்பு மற்றும் அதனை அண்டிய நகரங்களில் அமைத்து மக்களின் வீட்டுப் பிரச்சினையை தீர்ப்பதற்கு நடைமுறைச்சாத்தியமான நிகழ்ச்சித் திட்டமொன்றை உருவாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.53/ ’10

கௌரவ திலங்க சுமதிபால,— கொழும்பு நகரில் மழைநீர் வழிந்தோடுவதை ஒழுங்கு முறையாக்கல்,— கொழும்பு நகரில் இன்றும் காணப்படுவது 100 ஆண்டுகளுக்கும் மேல் பழைமைவாய்ந்த நீர் வழிந்தோடும் வடிகால் தொகுதியென்பதோடு, அது ஒழுங்கான முறையில் தொழிற்படாததாலும், அரை மணித்தியாலம் தொடர்ச்சியாக பெய்யும் மழையினால் கொழும்பு நகரம் முழுவதும் நீரில் மூழ்கும் நிலை தோன்றியுள்ளதாலும் முறைசாரா விதத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள குடியிருப்புகள், கட்டடங்கள் மற்றும் அனுமதியற்ற நிர்மாணிப்புகளினால் சுற்றாடலுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாலும், கடும் மழை பெய்யும் சந்தர்ப்பதத்தில் கொழும்பு நகர சபையின் ஆளுகைப் பிரதேசத்தினுள் ஏற்படும் வெள்ள அனர்த்த நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காக மழைநீர் ஒழுங்காக வழிந்தோடுவதற்கு ஏற்றவகையில் சம்பந்தப்பட்ட வடிகால் தொகுதிகளை நவீனமயப்படுத்தி, சுத்தம் செய்து ஒழுங்கு முறையாக பேணிவரப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.54/ ’10

கௌரவ திலங்க சுமதிபால,— மருத்துவத் துறையின் தொழில் சார் பெறுமதியினைப் பேணல்,— உள்நாட்டு, சர்வதேச மருத்துவ முறையினுள் தொழிற்தகைமை மற்றும் அனுபவத்தினைக் கொண்டிராத மருத்துவர்கள் சிகிச்சையளிப்பதில் ஈடுபட்டுள்ளமையினால், சாதாரண நோயாளர்கள் பாரிய சிக்கல்களுக்கு முகங்கொடுக்க வேண்டி நேர்ந்துள்ளதால் பரிதாப நிலைக்கு ஆளாகியுள்ளதாதலாலும், இதன் மூலம் மருத்துவத் துறையில் பணியாற்றும் தகைமை பெற்ற தொழில்சார் மருத்துவர்கள் சமூகத்தில் அவமானத்திற்கு உள்ளாகியுள்ளதாதலாலும், மருத்துவத் துறையின் தொழில்சார் பெறுமதியினை பேணுமுகமாக, ஒழுங்காகவும் முறைசார் ரீதியிலும் சட்ட ரீதியிலும் நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.55/ ’10

கௌரவ திலங்க சுமதிபால,— ஊடக சுதந்திரத்தையும் தகவல் அறியும் உரிமையையும் உறுதிப்படுத்தல்,— அரசியலமைப்பின் தகவல்களை அறிவதற்கும் வெளியிடுவதற்குமுள்ள உரிமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாலும், தொழில்நுட்பம் முன்னேறிவரும் உலகில் உண்மையை ஒழிக்கவோ மூடி மறைக்கவோ சந்தர்ப்பம் இல்லாததாலும், சனநாயக நாடொன்றில் அனைத்து பிரசைகளுக்கும் சுதந்திர ஊடகங்கள் மூலம் அறிவையும் புரிந்துணர்வையும் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பளிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.56/ ’10

கௌரவ திலங்க சுமதிபால,— விளையாட்டின் மூலம் நோயற்ற சமூதாயமொன்றை உருவாக்குதல்,— பிள்ளைப் பருவத்திலேயே பிள்ளைகளை விளையாட்டில் ஈடுபடவைப்பதன் மூலம் நோயற்ற சமூதாயத்தை உருவாக்குவதற்கும், இயற்கையிலேயே திறமைகளைக் கொண்டுள்ள பிள்ளைகளை சர்வதேச மட்டத்திற்கு ஆற்றுப்படுத்துவதற்கும்/உலகப் புகழ்வாய்ந்த விளையாட்டு வீரர்களை உருவாக்கி நாட்டிற்கு நற்பெயரை பெற்றுக் கொள்ளும் வகையில் இன பேதமற்ற வகுப்புப் பேதமற்ற நியாயமான செயல் முறையொன்று அரச மட்டத்தில் வகுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.57/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேருநர் இடாப்பை அடிக்கடி இற்றைப்படுத்துதல்,— தேருநர் இடாப்பு வருடத்தில் மாதமொன்றுக்கு முப்பது நாட்களுக்கு மட்டும் இற்றைப்படுத்தும் பட்டியலொன்றாக அல்லாமல் அது அடிக்கடி இற்றைப்படுத்தும் திறந்த பட்டியலொன்றாக இருத்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.59/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களில் ஈடுபட்டுள்ளோருக்கு ஓய்வூதிய முறையொன்றை அறிமுகப்படுத்துதல்,— வெளிநாடுகளுக்குச் சென்று மிகவும் சிரமத்திற்கு மத்தியில் உழைக்கும் செல்வத்தை, இலங்கையின் செல்வத்தை அதிகரிப்பதற்காக அனுப்புகின்ற, வெளிநாட்டு வேலைவாய்ப்புகளில் ஈடுபட்டுள்ளவர்களை மதிக்கும் வகையில் ஓய்வூதிய முறையொன்றை பெற்றுக்கொடுத்தல் வேண்டுமேன இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.60/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— 2009 மே மாதம் 19 ஆம் திகதிக்கு முன்னர் சேவையில் இருந்த ஆயுதப் படையினருக்காக ஓய்வூதிய முறையொன்றை அறிமுகப்படுத்தல், — பாராளுமன்ற உறுப்பினர்கள் 5 வருட சேவைக்காலத்தை பூர்த்திசெய்த பின்னர் ஓய்வூதியத்தைப் பெறுவதற்கு தகைமைபெறுகின்றதனால் ஆயுதப் படைகளில் 22 வருடங்கள் பூர்த்தி செய்யாத போதிலும் 2009 மே மாதம் 19 ஆம் திகதிக்குப் முன்னர் சேவையில் இருந்த ஆயுதப் படையினருக்கும் ஓய்வூதியம் பெற்றுக்கொடுக்கப்படல் வேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.62/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— வலது குறைந்ததும் நடமாடமுடியாததுமான நபர்களுக்கு விசேட வடிவங்களை அறிமுகப்படுத்துதல்,— சட்டத்தில் குறிப்பிடப்படுகின்றவாறு வலது குறைந்தோரின் வசதிகளை உறுதிப்படுத்தவும் அவர்களிடமுள்ள வினைத்திறனை அதிகரிப்பதற்காகவும் அவர்கள் தேவையற்ற விதத்தில் பிறர்மீது தங்கிருப்பதைக் குறைப்பதற்காகவும் அரசாங்கத்தின் அனைத்து புதிய கட்டிடங்கங்களிலும் விசேட வடிவமொன்றை அமைக்க வேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.63/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— வாக்களிக்கும் உரிமையை உறுதிப்படுத்தல்,— பதிவுசெய்திருந்தும் வாக்களிப்பதற்கான வாய்ப்புக்கிடைக்காத வாக்காளர் அநேக எண்ணிக்கையானோர் இருப்பதனாலும் 18 வயதுக்கு மேற்பட்ட அனைத்து நபர்களுக்கும் வாக்களிக்கும் உரிமையை பெற்றுக்கொடுக்க வேண்டுமெனவும் தேருநர் இடாப்பில் பெயர் குறிப்பிடப்பட்டதன் பின்னர் வாக்களிக்காத நபர்களிடமிருந்து தண்டப் பணமொன்றை அறவிவிடுதல் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.64/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஊழலற்ற உலகொன்றை உறுதிப்படுத்தல்,— ஊழலை முற்றாக ஒழிப்பதற்காக இலங்கை பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றிணைந்து உலகிலுள்ள பாராளுமன்ற அமைப்புக்களில் சேர வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.65/ '10

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— காதி நீதிமன்ற முறைமைக்கு உயர்ந்த இடத்தைப் பெற்றுக்கொடுத்தல்,— 1929 ஆம் ஆண்டின் முஸ்லிம் விவாக, விவாகரத்து கட்டளைச்சட்டத்தின் கீழ் காதி நீதிமன்ற முறைமை இலங்கையில் தாபிக்கப்பட்டு, அதன் பின்னர் 1951 இல் முஸ்லிம் விவாக, விவாகரத்து சட்டத்தின் கீழ் திருத்தப்பட்ட அக்கட்டளைச்சட்டம், முஸ்லிம் குடும்பங்களில் எழுகின்ற பிணக்குகள் தொடர்பான அனைத்து விடயங்களையும் தீர்மானிப்பதற்கு உரித்தளிக்கப்பட்ட, காதி நீதிபதிகளின் தத்துவங்கள் மேம்படுத்தப்பட வேண்டும் என்பதோடு, முறைமையின் கௌரவத்திற்கு பொருத்தமான இடங்களில் அமர்வுகள் அத்தகைய முறையில் நடத்தப்படுவதற்கு ஏற்றவாறு காதி நீதிமன்ற முறைமையின் அந்தஸ்து தரமுயர்த்தப்பட வேண்டும் என்றும் நீதிச் சேவை ஆணைக்குழுவினால் காதி நீதிபதிகள் நியமிக்கப்படுவதனால் ஏனைய நீதிமன்ற அதிகாரிகளுக்கு கொடுக்கப்படக்கூடிய மதிப்புமிக்க, ஏற்றுக்கொள்ளத்தக்க சம்பள அமைப்பொன்றில் அவர்கள் வைக்கப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 69/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஏமாற்றப்பட்ட பண வைப்பாளர்களுக்கு தமது நிதிகளை மீளச் செலுத்துதல்,— போலி நிதி நிறுவனங்களில் தமது பணத்தை வைப்பிலிட்டு அதனால் ஏமாற்றமடைந்த அநேகமானோர் இருப்பதனாலும் கடந்த 2009/2010 தேர்தல் பிரசாரங்களில் இந்த அரசாங்கம் பண வைப்பாளர்கள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கு அவற்றின் மிகுதிப் பணத்தை மீளச் செலுத்த வாக்குறுதி அளித்திருப்பதனாலும் மத்திய வங்கி இந்நிறுவனங்களின் பொறுப்பாளராக இருப்பதனால் மிகவும் வினைத்திறனுடன் செயற்படவேண்டுமென்பதோடு பண வைப்பாளர்களுக்கு அவர்களது மிகுதிப் பணத்தை பெற்றுக் கொடுக்க அரசாங்கம் முன்வர வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 70/ '10

கௌரவ புத்திக பதிரண,— அங்கவீனமுற்ற மற்றும் விசேட தேவைகள் உள்ள பிள்ளைகளுக்கு தொழிற்பயிற்சியை அளித்தல்,— அங்கவீனமுற்ற மற்றும் விசேட தேவைகள் உள்ள பிள்ளைகளுக்காக மாவட்ட, மாகாண மட்டங்களில் தொழிற்பயிற்சியை அளித்து அப்பிள்ளைகளை முறையான விதத்தில் தொழில்வாய்ப்புகளுக்கு அனுப்பும் திட்டமொன்று அமுல்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுன்றம் கருதுகின்றது.

பா. 71/ '10

கௌரவ புத்திக பதிரண,— சுதேச ஆயுர்வேத மருத்துவர்களுக்கு சமாதான நீதவான் நியமனங்களை வழங்கல்,— சுதேச ஆயுர்வேத மருத்துவர்கள் பணத்தையும் சிறப்புரிமைகளையும் எதிர்பார்க்காமல் அவர்களால் சமூகத்திற்கு ஆற்றப்படவேண்டிய சமூகப் பொறுப்பாகக் கருதி, குறிப்பாக கிராமிய மக்களுக்கு அளப்பெரும் சேவையை ஆற்றிவருவதனால், அச்சேவையை கௌரவிக்கும் வகையில் ஆயுர்வேத மருத்துவ சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள அனைவருக்கும் சமாதான நீதவான் பதவிகள் வழங்கப்பட வேண்டுமென இப்பாராளுன்றம் கருதுகின்றது.

பா. 72/ '10

கௌரவ புத்திக பதிரண,— சமாதான நீதவான் பதவிகளை வழங்குவதற்கான முறையான வழிமுறையொன்றைத் தயாரித்தல்,— சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றதும் சமுகத்திற்கு அளப்பரிய சேவையாற்றுவதுமான சமாதான நீதவான் பதவிகள், ஏற்றுக்கொள்ளப்பட்ட நியதிகளுக்குப் புறம்பாக வழங்கப்படுவதன் காரணமாக அப்பதவியின் கௌரவமும் அங்கீகாரமும் படிப்படியாக குறைவடைவதனால் குறித்த நியமனங்களுக்கென முறையான வழிமுறையொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுன்றம் கருதுகின்றது.